1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு பங்குனி மாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 12-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### நம்பத்திரிகை

பரிசுத்தவாரத்தையிட்டு வழமைபோல நம்பத்திரிகை அடுத்த 29-ந்திகதி வியாழக்கிழமை வெளிவரமாட்டாது. அடுத்த சித்திரைமாதம் 5-ந் திகதி வியாழக்கிழமையே வெளிவரும்.

### நமது அச்சியந்திரசாலை

பரிசுத்தவாரத்தையிட்டு இம்மாதம் 28-ந் திகதி புதன்கிழமை மத்தியானந் தொடக்கம் அடுத்த சித்திரைமாதம் 2-ந் திகதி திங்கட்கிழமை முடிகிறவரையிலே நமது அச்சியந்திரசாலை பூட்டப்பட்டிருக்கும். 3-ந் திகதி செவ்வாய்க்கிழமையே மறுபடி வேலை ஆரம்பமாகும்.

### நோயாளரும் சத்திரசிகிச்சையும்

கொழும்பு, அரசினர் பெரியஆஸ்பத்திரியிலே சத்திரவைத்தியசிகிச்சை செய்யப்படவேண்டிய நோயாளராய் 3,151 பேர் இருந்துவருகின்றனர். இவர்களிலே 1,327 பேர் அவசியமாகச் சத்திரசிகிச்சை பெறவேண்டியவர்கள். இவர்களெல்லாம் தங்கள்முறை எப்போதுவருமென்று நாளெண்ணித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம்காரணம், திறமைவாய்ந்த டக்றர்மார் போதியளவு இல்லாதிருப்பதேயாகும்.

### அரிசி வியாபாரமும் இலங்கையரும்

இலங்கையில் தற்போது அரசாங்கம் மாத்திரமே பிறநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்கின்றது. ஆயினும், பங்கீட்டரிசியையும், பங்கீட்டிற்சேராத அரிசியையும் விற்பனைசெய்து வியாபாரம்நடத்துவதில் கூட்டுறவுச் சங்கங்களிலும்பார்க்கத் தனிப்பட்ட அரிசி வியாபாரிகளே அதிகமாயிருக்கின்றனர். தற்போது பங்கீட்டிற்சேராதஅரிசியின் மொத்தவிற்பனவையும், சில்லறை விற்பனவையும் அதிகமாக இந்தியரே நடத்திவருகின்றார்கள். ஆனால், வருகிற வைகாசிமாதமுதல் இந்தவிற்பனவை இலங்கையர்வசமே முற்றாக ஒப்படைத்துவிட அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. அதனால், இலங்கையரல்லாத மொத்தவியாபாரிகளும், பிறநாட்டினரான சில்லறை வியாபாரிகளும் வருகிற சித்திரைமாத முடிவோடு தங்கள்அரிசிவியாபாரத்தை ஒதுக்கிவிடவேண்டுமென அறிவித்தல்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

### ஊர்வல—ஒலிபெருக்கி விலக்கு

இலங்கையின்பொதுத்தேர்தற் சரித்திரத்தில் முதன்முறையாகத் தேர்தல் தினங்களில் ஒலிபெருக்கிகளைப் பிரயோகிப்பதும், எந்தவிதமான ஊர்வலங்களையும் நடத்துவதும் விலக்கப்படவிருக்கின்றன. அவ்விதமே அவைகள் தேர்தல்முடிவுகள் அறிவிக்கப்படும் தினங்களிலும் விலக்கிவிடப்படும். போட்டிக்கட்சிகள் மோதிக்கொள்வதையும், அதனால் விரும்பத்தகாத சம்பவம்எதுவும் நடப்பதையும் இதுதடுத்துவிடுமென்று பொலிஸ் இன்ஸ்பெக்றர்-ஜெனறல் தெரிவித்திருக்கின்றார்.

### பொதுத்தேர்தலும் கொடிகளும்

பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் அவிசாவலையைச்சேர்ந்த பூவாக்பிட்டிஎனுமிடத்தில் சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தற் பிரசாரகூட்டம்ஒன்றில் பேசியபோது: "அடுத்த பொதுத்தேர்தலிலே கொடிகள் பறக்கவிடுவதைத் தடுத்துவிடவேண்டுமென்று நான்எண்ணுகிறேன்; ஏனெனில், அவைகள் அவசியமில்லாத போரித்தனத்தை உண்டுபண்ணி, அவசியமற்ற செலவுக்கேதுவாயும் இருக்கின்றன; எனது தொகுதியாகிய தொகுதியாகிய தொடங்கஸ்லந்தையிலே கொடிகளைக் கைவிடும்படியாய் நான் எனது ஆதரவாளர்களைக் கேட்டிருக்கிறே"னெனக் கூறலாயினர்.

### கொடிகளை இறக்க உடன்பாடு

பொதுத்தேர்தலிலே சாவகச்சேரித் தொகுதிக்கு அபேட்சகர்களாகப் போட்டியிடுகின்ற திரு. வி. குமாரசாமி (சுயேச்சை) அவர்களும், திரு. வி. என். நவரத்தினம் (சமஷ்டி) அவர்களும் சமாதானபங்கத்துக் கேதுவான போரித்தனங்கள், வீண்வாதங்களை நிறுத்திவைக்குமாறு வீதிகளில்ஏற்றியுள்ள கட்சிக்கொடிகளையெல்லாம் இறக்கிவிடுதற்குச் சென்றதிங்கட்கிழமை சாவகச்சேரிப் பொலிஸ்ஸ்றேஷனிலே யாழ்ப்பாணப் பொலிஸ்சுப்பிறின்ரெண்டன் முன்பாக உடன்பட்டிருக்கிறார்கள். இவ்விதம் அபேட்சகர்களிடையே எல்லாத்தொகுதிகளிலும் உடன்பாடு ஏற்படுமானால் மிக நன்றாயிருக்கும்.

### வாக்குச்சீட்டுப் பெட்டிகள்

தேர்தல்நடைபெற்ற அன்றுதினமே வாக்குச்சீட்டுகள் எண்ணப்படாத தொகுதிகளில் முத்திரையிடப்பட்ட வாக்குச்சீட்டுப் பெட்டிகளைக் காவல்செய்ய அந்தந்தத்தொகுதி அபேட்சகர்கள், அல்லது அவர்களின் ஏசன்றுகள் அனுமதிக்கப்படுவார்கள். தேர்தலுக்குத் தலைமைவகிக்கும் அதிகாரிகள் அபேட்சகர்களின் எழுத்துமூலமான சம்மதத்துடன் அல்லது தமதுசொந்த எண்ணத்துடன் பாதுகாப்பு நியாயங்களையிட்டு வாக்குச்சீட்டுகள் எண்ணுவதைப் பின்போடுவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருப்பார்கள். ஆயினும் தேர்தல்நடைபெற்ற அன்றுதினமே கூடியமட்டும் வாக்குச்சீட்டுகள் எண்ணப்படுதற்கான வழிவகையைச் செய்யவேண்டுமென்று அவர்கள்கேட்கப்பட்டிருக்கின்றார்கள்.

### நெல்விளைவு குன்றியது

இவ்வருடம் காலமழை பெய்துகொடாத காரணமாக இலங்கையில் நெல்விளைவு 25 லட்சம்புசலால் குறைந்துள்ளது. அநுராதபுரப் பகுதியில்தான் நெல்விளைவு பெரிதும்பாதிக்கப்படலாயிற்று. அங்கு இம்முறை நெல்விளைவு 9 லட்சம் புசலால் குறைந்துபோய்விட்டது. அதனால் அப்பகுதிக் கமக்காரருக்கு 1கோடியே 80லட்சம் ரூபாநஷ்டம்ஏற்பட்டிருக்கிறது. அங்கு விளையுமென எதிர்பார்க்கப் பட்டிருந்த நெல் 20 லட்சம் புசல். விளைந்தநெல் 11 லட்சம்புசல் மாத்திரமே. பொதுவில் 2கோடியே 40லட்சம் ரூபாபெறுமதியான 20 லட்சம் புசல்நெல் இம்முறை விளையவில்லையென்றும், 80ஆயிரம் ஏக்கர் நெல்வயல் பாதிக்கப்பட்டதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

### பாராளுமன்ற திறப்புவிழா

அடுத்த சித்திரைமாதம் 5-ம், 7-ம், 10-ந் திகதிகளிலே பொதுத்தேர்தல் நடந்துமுடிந்தபின் அம்மாதம் 20-ந் திகதி வெள்ளிக்கிழமைகாலை 10மணிக்குப் புதியபாராளுமன்றம் கவர்னர்-ஜெனறலால் திறந்துவைக்கப்படும். ஆடம்பரவைபவங்களுடன் நடந்தேறவிருக்கும் இத்திறப்புவிழாவிற்குச் சமுகமளிக்குமாறு 450 தரிசகர்கள் அழைக்கப்படவிருக்கின்றார்கள். இவர்களில் செனற்றர்களும், இவர்களின் மனைவியர்களும், பாராளுமன்ற அங்கத்தவர்களின் மனைவியர்களும், சுப்பிறீங்கோட்டு நீதியரசர்களும், இவர்களின் மனைவியர்களும், பிறநாடுகளைச்சேர்ந்த ஸ்தானிகர்கள், இராசீய தூதுவர்களும், மேயர்களும், இவர்களின்மனைவியர்களும், சமயகுருசிரேஷ்டர்களும், பிறரும் அடங்குவார்கள்.

### புத்தஜயந்தியும் மதுபானவிலக்கும்

புத்தஜயந்திகாலத்திலே இலங்கையில் ஒருவாரத்துக்குப் பூரணமதுவிலக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். அடுத்த வைகாசிமாதம் 23-ந்திகதிமுதல் 30-ந் திகதிவரையிலே மதுபானவிற்பனைகளெல்லாம் நிறுத்தப்படவேண்டுமென்று எவ்வித மதுபானங்களையுமேவிற்க லைசென்ஸ் வைத்திருப்பவர்களுக்கெல்லாம் அறிவித்துவிடுமாறு மதுபரிபாலன தலைவருக்கு உள்நாட்டுமந்திரிசபையிடமிருந்து உத்தரவுபோயிருக்கிறது. தவறணைகள், பிறதேச, உள்நாட்டுக் குடிவகைகள் விற்கும் பார்கள், குடிவகைகள்விற்க லைசென்ஸ்பெற்றுள்ள ஹொட்டல்கள், மதுபானம்வழங்கும் சமூகக்ளப்புகள் தாணும் இந்தவிலக்கில் அடங்கும்.

### ஜயந்தி விடுமுறைநாட்கள்

புத்தஜயந்தி ஆரம்பவார விடுமுறைநாட்களின்தொகையை மூன்றுநாட்களால் அதிகரிக்கச்செய்ய வேண்டுமென்று மந்திரிசபை தீர்மானித்திருக்கிறது. வைகாசிமாதம் 23-ம், 24-ந் திகதிகள் வழமையிலே அரசாங்கவிடுமுறைநாட்களாகும். இவற்றுடன் 25-ம், 26-ம், 28-ந் திகதிகளையும் அரசாங்க விடுமுறைநாட்களாகப் பிரகடனஞ்செய்ய மந்திரிசபை முடிவுசெய்திருக்கிறது.

### ஆங்கிலமும் சிங்களமும்

காலியிலுள்ள வித்தியாலோக பிரிவேனாஎன்ற கல்லூரியின் தலைவரான புன்னசார நாயகதெரோஎனும் புத்தகுரு வத்தேகாமத்திலுள்ள கணேகம புத்த கலவன்பாடசாலைப் புதிய கட்டடத்துக்குச் சென்ற 13-ந்திகதி அத்திவாரக்கல்நாட்டிப் பேசியபோது: சிங்களப்பாடசாலைகளிலெல்லாம் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும்; ஆங்கிலபாஷையில்லாது நாம்ஒன்றுஞ் செய்யமுடியாது; அதனைவேண்டாப் பொருளாக நாம் வீசித்தள்ளப்படாது; 1957-ம் ஆண்டிலே எஸ். எஸ். சி. பரீட்சையைச் சிங்களத்தில்நடத்த அரசாங்கம் ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கிறது; இவ்வாறு நடத்தப்படும்போது, ஆங்கில-சிங்கள கலாசாலைகளுக்கிடையிலுள்ள வித்தியாசம் மறைந்துவிடுமெனக் கூறலாயினர்.

### வர்த்தகஸ்தாபன விடுமுறைகள்

புத்தஜயந்தி ஆரம்பவார அரசாங்க விடுமுறை நாட்களெல்லாம் வர்த்தகஸ்தாபனங்களின் விடுமுறைநாட்களாகவும், ஜயந்திவருடத்தில்வரும் எல்லாப் பவரணைத்தினங்களும் வங்கிவிடுமுறைநாட்களாகவும் பிரசித்தஞ்செய்யப்படும். நிகழும் 1956-ம் ஆண்டின் ஆவணி, புரட்டாசி, ஐப்பசிமாதங்களில் வரும் பவரணைநாட்களும், 1957-ம் ஆண்டின் மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில்வரும் பவரணைநாட்களும் அரசாங்க விடுமுறை நாட்களாகவும், வங்கிவிடுமுறைநாட்களாகவும் பிரசித்தஞ்செய்யப்படும். இவ்வருடம் கார்த்திகைமாதப் பாவணை ஒருஞாயிற்றுக்கிழமையில் வருவதால் அதனை ஓர்அரசாங்க விடுமுறைநாளாகப் பிரசித்தஞ்செய்யவேண்டிய அவசியம் அரசினருக்கு ஏற்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூதாசின் முத்தம்

( சி. எஸ். நாயகம், ஸ்டேஷன்மாஸ்டர், கெம்பாஸ் — மலாயா )

இரக்கம்நிறைந்த சர்வேசுரனின் கிருபையால் நாம்இப்பொழுது தபசுகாலத்தின் மத்தியிலிருக்கிறோம். நம்முள் சிலருக்கு இந்தப்பாக்கியமான தபசுகாலம் ஓர்வேளை கடைசியான தபசுகாலமாய் இருக்கலாம். ஆகையால், தபசுகாலத்தின் அருமையை — அதன்காத்திரத்தைச் சற்றே துருவிஆராய்வது பெரிதும் பயன்படக்கூடியதாகும்.

ஆகவே, தபசுகாலம்என்றால் என்ன? இவ்வுலகின் அநித்தியவாழ்வையும், மறுமையின் நித்தியவாழ்வையும் நமக்கு நினைவூட்டுங்காலம். நமது இருதயத்தின் அடித்தள மட்டுஞ்சென்று நம்முடைய ஆத்துமத்தின் நிலைமையைக் களங்கமறப் பரிசோதிக்குங்காலம். கடந்த காலத்திலே நாம்விட்ட ஆன்மபிழைகளைத் திருத்திக்கொள்ளுங் காலம். பாவமனிதனாகிய பழைய பாவமனிதனைக் களைந்துவிட்டுப் புதியமனிதனாகிய கிறீஸ்துநாதரை அணிந்துகொள்ளும் காலம். அவரின் திருப்பாடுகளை விசேஷவிதமாக மிகுந்தஉருக்கத்துடன் தியானிக்குங்காலம். நமதுபாவங்களுக்காகக் கசிந்துருகித் தேவ மன்னிப்பை இரந்துநிற்குங்காலம். நமது பாவங்களுக்குச் செபத்தினாலும், தபத்தினாலும், உபவாசத்தினாலும் விசேஷவிதமாகப் பரிகாரம் — பிராயச்சித்தஞ் செய்யுங்காலம். ஞானவேளாண்மையின் காலம், தேவனோடு சமாதானமாய்ப் போகுங்காலம். நித்தியபேரின்பத்துக்கு நம்மை ஆயத்தப்படுத்துங் காலம். செபதப, தானதர்மம், பூசை, சிலுவைப்பாதை, பசாம், ஒப்பாரி, ஞானவாசினை ஆகியவைகளாலே நம்மைஅதிகமாகப் புனிதப்படுத்துங் காலம். சுருங்கச்சொல்லுமிடத்து நாம் தபத்தின்மூலமாய்ச் சர்வேசுரனிடமிருந்து பாவமன்னிப்பைப்பெற்று அவருடன் சமாதானமாய்ப் போகும் காலமே தபசுகாலம்.

இன்னும்தபம்என்பது, ஒறுத்தல்— உபவாசத்தைக் குறிக்கும். அது இருவகைப்படும். ஒன்று சரீரதபம். மற்றது மனத்தபம். சரீரதபம்என்றால் என்ன? நாம்உண்ணும் உணவைக் குறைத்து, நமதுமதங்கொண்ட சரீரத்தை அடக்கியாளுவதே. நமது ஆத்துமஇரட்சணியத்துக்குச் சரீரஒறுத்தல் எவ்வளவு அவசியம் — அது எவ்வளவு இன்றியமையாதது என்பதை நாம்எளிதில் கண்டுபிடிக்குமாறு திவ்வியகர்த்தர்தாமே முன்மாதிரிகையாக வனவாசஞ்செய்து, வனமிருகங்கள் மத்தியிலே நாற்பதுநாள் அன்னஆகாரமின்றி — வெறுந்தண்ணீர்தானுமின்றிச் சுத்தஒறுத்தல் — உபவாசமாய் இருந்தார் (மாற். 1:13). மாசுமறுவற்றகடவுளே இவ்விதம் ஒறுத்தல் — உபவாசமாய் இருந்தாரென்றால் பாவத்தில்செனமித்து, பாவத்தில் வளர்ந்த பாவிமனிதர்களாகிய நமக்கு இந்த ஞானசஞ்சீவி எத்துணை அகத்தியம் — எத்துணை இன்றியமையாததென்று சொல்லவும் வேண்டுமா? "நீங்கள் தபஞ்செய்யாவிட்டால் எல்லோரும் கெட்டழிந்து நாசமாய்ப்போவீர்கள்" (லூக். 13:5.) என்று கர்த்தர்தாமே எச்சரித்திருக்கிறார். சாக்கு உடுத்து, சாம்பரில்உட்கார்ந்து செய்த கடின தபத்தின் பலனாலேயே தேவ முனிவிலும், தண்டனையிலும், அழிவிலுமிருந்து அருந்தப்பாகத் தப்பிப்பிழைத்தார்கள் நினிவேநகரத்தாரான அந்த 1,20,000 மக்களும்.

கிறீஸ்துநாதர் தம்மைப்போலாவது அல்லது இந்தநினிவே நகரத்தாரைப் போலாவது கடின தபசுசெய்யும்படி ஒருசந்தி — உபவாசமாய் இருக்கும்படி நம்மைவற்புறுத்தவுமில்லை — கட்டாயப்படுத்தவுமில்லை. இதுவிஷயமாய்த் திருச்சபையின்கட்டளையை நாம் சுமுத்திரையாய் அனுசரித்தால் அதுவே போதுமென்பது அவரின் சலுகை. கிறீஸ்துநாதருடையவும், நினிவேநகரத்தாருடையவும் தபசு — உபவாசத்துக்குமுன்னால் நாம் தற்காலம் அனுசரிக்கும் ஒறுத்தல் — உபவாசம் உண்மையளவில் ஒறுத்தல் — ஒருசந்தி - உபவாசமென்று சொல்லவியலாது. இவ்வளவு இளக்காரத்தைக் கிறீஸ்துநாதர் தமதுதிருச்சபைமூலம் நமக்குத்தந்தும், நம்மில் எத்தனையோ பேர் இதை ஓர்பெரும் பாரச்சுமையெனநினைத்து, "வயிறே தெய்வம்" என்றாற்போல் தங்கள் மனம்போன போக்கில் மீறிநடக்கிறார்கள். இதன் பலாபலனைக் கண்மூடியபின் தான் இவர்கள் சரிவரஉணர்வார்கள்.

இனி, மனத்தபம்என்றால் என்ன? மனதினால்நாம் பாவங்கட்டிக் கொள்வதில்லையா? அதுபோலநாம் மனதினால் தபம்அனுட்டிக்கும்போது மனத்தபமாகும். இந்தமனத்தபம் இருவகைப்படும். ஒன்று நம்மனதைப் பாவப்பற்றுகளில் நாடவிடாது — அவற்றில் படர்ந்து செறியவிடாது நமதுபஞ்சேந்திரியங்களை — கண், வாய், மூக்கு, செவி, சரீரம்முதலிய ஐம்புலன்களை மனதினால் அடக்கிஆளுவதில் அடங்கும். மற்றது, நீரினால்உண்டான சேற்றை நீரினால்கழுவிச் சுத்தமாக்குவது போல், மனதினால் கட்டிக்கொண்ட பாவங்களுக்கெல்லாம், மனதினால் நொந்து, கசிந்துருகி மன்னிப்புஇரந்து நிற்பதில் அடங்கும். சிந்தனையினாலும், வாக்கினாலும், கிரிகையினாலும் நாம்கட்டிக்கொள்ளும் எந்தஒரு பாவத்திற்கும் மனமேகாரணம். ஏனெனில், இயற்கையாக நமதுஐம்புலன்களில் உண்டாகும் எந்த ஒரு பாவச்சோதனைக்கும் நமதுமனம் உடன்படாவிடின் அது பாவமல்ல. ஆனால், ஒருபாவச்சோதனை நம்மில் உண்டாகும்பொழுது நாம் அதைச் சந்தோஷமாகவும், பூரணமாகவும் மனதில் ஏற்றுக்கொள்வோமானால் — மனத்தினாலே சம்மதித்தோமானால் பிறகுநாம் அந்தப்பாவத்தைக் கிரிகையில் கட்டினாலும்சரி, விட்டாலுஞ்சரி பாவமேபாவம்.

"ஓர்ஸ்திரியைஇச்சிக்கும்பொருட்டு அவளை நோக்குகிறஎவனும் தன்இருதயத்தில் அவளோடு விபசாரம்செய்தாயிற்று" (மத். 5:28.) என்பது கர்த்தரின் திருவாக்கியம். இந்தப்பார்வைக்கும், இச்சைக்கும்காரணம் மனமே. இந்தப்பார்வையும், இச்சையும் இயற்கையிலே தலைகாட்டியதும், "இல்லை இல்லை, அதுமுடியாது - வேண்டாம் - சீ, நரகக்கூளியே அப்பாலேபோ" என்று மனம் உத்தரவு - சம்மதம் கொடாமல் வெறுத்துத்தள்ளுமானால் அந்தப்பார்வையினாலும், இச்சையினாலும் நமக்கு ஒருபாவமுமில்லை - கெடுதியுமில்லை. இந்த ஞானப்போராட்டத்திலே நமக்கு வெற்றியேயன்றித் தோல்வியல்ல. ஆகையால், பாவத்துக்கோ, புண்ணியத்துக்கோ மனமேகாரணம். எனவே, செய்துகொண்ட எத்தகைய பாவங்களுக்கும் மனதிற்கலங்கித் துக்கப்பட்டுக் கண்ணீர்சிந்தி மன்னிப்பிரந்து நாம்வேண்டுதல் செய்வதிலே மனத்தபம் அடங்கும். இவ்வித தபத்தின் கனிகளைக் குலைகுலையாய்ப் பூத்துக்காய்க்கும் வசந்தகாலமே தபசுகாலம். இது அவருடையகிருபையின் காலம், இரக்கத்தின்காலம்.

## கத்தோலிக்க இலக்கியவிழா

சென்ற 4-3-56 ஞாயிறன்று காலை 9 மணியளவில் மட்டக்களப்பு அர்ச். செபஸ்தியார்பாடசாலை மண்டபத்தில் "அச்சுப்பிரசுர ஞாயிறு விழா" இனிதுநடந்தேறியது. இப்பங்குவிசாரணைக் கத்தோலிக்கஐக்கியசங்க அக்கிராசனர் திரு. எவ். சி. ருகல்அவர்கள் இதனை ஆரம்பித்துவைத்தனர். விழாவின் ஆரம்பத்திலே கத்தோலிக்க கவிஞர் திரு. பெஸ்கிதாஸன் அவர்களின் "அச்சகம் உருளவேண்டும்" என்ற பாட்டு அர்ச். செபஸ்தியார் விடுதிச்சாலைமாணவர்களால் படிக்கப்பெற்றது. பாட்டின்நாதம் விண்ணைநோக்கி எழுந்தது. கருத்தின்செறிவிலே மக்கள் யாபேரும் மனதைப்பறிகொடுத்திருந்தனர். அதன்பின் தலைவர் அவர்கள் தமதுமுகவுரையில் இவ்விழாவின் முக்கியத்தையும், அதனால் ஏற்படக் கூடிய நன்மைகளையும் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தார். தலைமைஆசிரியர் திரு. யோசெவ்அவர்கள்: "கத்தோலிக்க பத்திரிகை" என்னும் விஷயத்தையொட்டிச் சிறந்த ஓர்சொற்பொழிவாற்றினார். அவர்கூறியதாவது: "கத்தோலிக்கரின் அன்றாட ஞானசீவியத்தின் மூலகாரணமாயிருப்பது கத்தோலிக்க பத்திரிகையே. ஒருநல்ல கத்தோலிக்க சமுதாயத்தை இணைக்கவோபிணைக்கவோ ஏதுவாயிருப்பது ஒருநல்ல கத்தோலிக்கபத்திரிகை. இதுவே கத்தோலிக்கரது முன்னேற்றத்தின் முதற்படி. ஆகவே, கத்தோலிக்கர் யாபேரும் இதற்கு உறுதுணைபுரிதல் அவசியம். ஒவ்வொரு கத்தோலிக்கரின் வீட்டிலும் ஒவ்வொருசுவிசேஷம் இருப்பதுபோன்று, ஒருகத்தோலிக்க பத்திரிகையும் இருக்கவேண்டும். இன்னும்நீங்கள் கத்தோலிக்கஉலகத்துடன் தொடர்புவையாதிருந்தால் இன்றே இந்தநிமிஷமே ஒரு கத்தோலிக்க பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேருங்கள்."

அடுத்தபடியாகத் திருமதி ஆர். மிக்கேல்அவர்கள்: "கத்தோலிக்கவாசகம்" என்னும் பொருள்பற்றிப் பேசினார். "மனிதனை நல்வழியில்சேர்ப்பதற்கும், தீயவழியில் அழைத்துச்செல்வதற்கும் ஏதுவானவற்றில் வாசகமும்ஒன்றாகும். அதனால், இதனை மனிதன் சிறந்தவழியில் பயன்படுத்துதல் வேண்டும். கத்தோலிக்கர்யாபேரும் இன்றைய உலகை நன்கு உற்றுப்பார்க்கவேண்டும். மின்னல்வேகத்தில் மலைபோன்று குவிந்துகிடக்கின்ற தீயநூல்களை நாம் காண்கின்றோம். சுவைக்கின்றோம். காரணம்? நம்மவர்களின் அசட்டைத்தனமும், போதிய நல்லகத்தோலிக்க வாசகம் இல்லாக்குறையுமே. ஒரு தீயபிரசுரத்தை ஒருநல்ல பிரசுரத்தால்தான் எதிர்க்கமுடியும். இன்று பரந்துவரும் தீயநூல்களை எரிக்கவேண்டும், எதிர்க்கவேண்டும், நம்கத்தோலிக்க நல்வாசகங்கள்என்ற சிறந்தபிரசுரங்களால், கத்தோலிக்க நல்வாசகங்களால் நம்திருமறையைத் தழுவியவர்கள் அநேகர்! நல்வழிப்பட்டவர்கள் அநேகர்" எனப்பலவாகக்கூறினார்.

தொடர்ந்து செல்வன் லூ. ஜோவான், "கத்தோலிக்கவாசிகசாலை"யின் அவசியத்தைப்பற்றிப் பேசியபொழுது: "நம்பங்கில் கத்தோலிக்க வாசிகசாலை ஒன்று அவசியந்தேவை. தேவையைப் பூர்த்திசெய்யத் திரண்டுவரவேண்டும், நம்இன்றைய கத்தோலிக்கர்அனைவரும். அவர்களின் சேவை என்றும் தேவை. இளைஞர்கள் தங்கள் பொன்னானநேரத்தை வீணில் செலவுசெய்யாது அதனைப் பயன்தரக்கூடிய — உயர்ந்தஎண்ணம் கொடுக்கக்கூடிய ஒருகத்தோலிக்க வாசிகசாலையில் செலவிடவேண்டும். இது அவர்களின் முக்கியகடமைகளில் ஒன்று. இதோஇன்னும்சில நிமிஷங்களுக்குப்பின் நம கட்டளைக்குரவர் வண. ஏ. செலர்சுவாமியவர்கள் ஒருசிறு வாசிகசாலையைத் திறந்துவைப்பார். படித்துப் பயனுறுங்கள்!" எனக்கூறினார்.

இறுதியாக, கட்டளைக்குரவர்அவர்கள் கத்தோலிக்க வாசிகசாலையைத் திறந்துவைக்குமுன் தம்முடையகுறிப்புரையிலே: "கத்தோலிக்க இளைஞர்களே இதற்கு மூலகாரணமாய் இருத்தல்வேண்டும். அவர்களில்தான் இன்றைய உலகம் அமைந்திருக்கின்றது. இளைஞர்களே கத்தோலிக்கதிருமறையின் மறுமலர்ச்சிக்குக் காரணமாயிருந்தவர்கள். இவர்கள் பிறமதத்தவர்களை நம கத்தோலிக்க வாசிகசாலைக்கு அழைத்துவரவேண்டும். ஆகையால், மாணவர் மாணவிகள் இதனைஊக்குவித்து, நல்ல வாசகங்களைப் படிக்கவேண்டும். கத்தோலிக்கரின்முன்னேற்றம் மேலோங்க, அறிவு விருத்தியடைய, ஒழுக்கம் உச்சநிலையடைய உறுதுணைபுரிவது ஒருநல்ல கத்தோலிக்கவாசிகசாலை" யெனக் கூறினார்.

பின்னர் சுவாமியவர்கள் ஒருசிறு வாசிகசாலையை ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார். அக்கிராசனரது முடிவுரைக்குப்பின் 250-க்கு மேற்பட்ட கத்தோலிக்க புத்தகங்களும், பலவிதமான மாதாந்தபத்திரிகைகளும், இருவாரப்பத்திரிகைகளும் பார்வைக்கு விடப்பட்டு விற்பனைசெய்யப்பட்டன. இவைகள் ஆங்கிலம், தமிழ் என்னும் இருமொழிப் புத்தகங்கள்.

— செ. பயஸ் அருள்ராஜ்

● பிரித்தானியிலே கட்டப்பெற்ற சுமார் 80,000 புதியகார்கள் இன்னுமே விலைப்படாமல் இருப்பிலே இருந்துவருவதால் கார்தொழிற்சாலைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் ஏற்கனவே பன்னூற்றுக் கணக்கான தொழிலாளிகள் வேலையை விட்டு விலகும்படியாய் அறிவித்தல் கொடுக்கப் பட்டிருக்கிறார்கள். 1,25,000 பேர் வாரம்ஒன்றுக்கு நான்குநாள் வேலைமாத்திரம் கொடுபட்டுவருகிறார்கள்.

● ஐக்கியஅமெரிக்க தேசத்திலே இதற்குமுன் இல்லாதவிதமாய் அத்தனை பெருந்தொகைப்பணம் செலவிட்டு — அதாவது 50 லட்சம் டலர் செலவிட்டுச் சினிமாப்படமொன்று தயாரிக்கப்படவிருக்கிறது. இதிலே உலகப் பிரசித்திபெற்ற பதினொரு சினிமாநட்சத்திரங்கள் நடிக்க விருக்கின்றார்கள். அத்தேசத்திலே உள்நாட்டுயுத்தம் நடந்தகாலத்திலும், அதற்குமுன்னும் இருந்தமக்களின் சரிதையை இது காண்பிப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### சுகவரம்வேண்டிய பாலியன்

ஐக்கிய அமெரிக்கதேச மிக்சிகன்நகரைச் சேர்ந்த ஏழுவயதுடைய றன்டி எக்மன் என்ற லுத்தேரின் புரொட்டஸ்தாந்த சபைப்பாலியன் "லியூகிமியா" எனப்படும் இரத்தக்கான்சர் நோய்கண்டு டக்றர்மாரால் கைவிடப்பட்டு, லூர்துபதிசென்று மாதாவிடம் சுகவரம் வேண்டிக்கொண்டு, அங்கிருந்து அர்ச். பெர்னதேத்அம்மாளின் அங்கியில் ஒருசிறுதுண்டுடன் லூர்துபதியிலிருந்து தனது சுபதேசத்துக்குத் திரும்பியிருக்கிறான். இச்சிறுதுண்டாகிய திருப்பண்டம் லூர்துநகரின் தீயாஸ்மேற்றிராணியாராலே அவனுக்குக் கொடுபடலாயிற்று.

### ருஷியரும் கடவுள்நம்பிக்கையும்

வண. லெயோப்போல்ட் புரோன் சுவாமியார் 1945-ம் ஆண்டுவரையிலே பன்னிரு வருடகாலம் மஸ்கோநகரில் ஓர் அமெரிக்க விசாரணைக்குரவராய் இருந்துவந்தார். தாம் அங்குதங்கியிருந்த காலத்திலே சோவியற்அரசாங்கம் எடுத்த ஓர்குடிசனமதிப்பானது, ருஷிய மக்களுள் நூற்றுக்கு 70 விகிதமானோர் கடவுள் நம்பிக்கை உடையவர்களென்பதைத்தெளிவாகக்காட்டியதென்று சுவாமியார் சமீபத்திலே தெரிவித்திருக்கின்றார். அங்கு "தேசியகுடிசனமதிப்பின் அதிகார பூர்வமான உண்மையானமுடிபுகளை" அறிந்தசிலருள் தாமும் ஒருவரென்றும், "ஆனல், சோவியற் தலைவர்கள் இந்தமுடிபுகளைக் கவனித்துத் திடுக்காட்ட முற்றவர்களாய் அந்தக் குடிசனமதிப்புச் செல்லாதென்று தட்டிக்கழித்து விட்டார்க" ளென்றும் சுவாமியார் கூறுகின்றார்.

### வத்திக்கானின் குடிசனம்

வத்திக்கான் இராச்சியத்தில் ஆடவர்மாத்திரமே வசிக்கின்றனர்; அதனால், அஃது ஓர் ஆடவர்உலகமென்று நம்பப்படுகிறது. ஆனல், அங்குவசிக்கும் சுமார் ஆயிரம்மக்களில் ஏறக்குறைய மூன்றில்ஒருபங்குபேர் பெண்மணிகளாவர். இவர்களிலும் 22 பேர்மாத்திரமே கன்னியாஸ்திரிமார். பெண்மணிகளிலும் பெரும்பான்மையினர் அநேகதலைமுறைகளாக வத்திக்கானில் பணியாற்றிவந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. ஏனையோர் வத்திக்கானில் சஞ்சரிக்கின்ற குருமாரின் தாய்மார், சகோதரிகள், அல்லது மற்றும் உறவினரே. நூற்றுக்குமேற்பட்டபெண்கள் வீட்டுப்பணியாளர்கள். முன்னர் ஆடவரான வீட்டுப்பணியாளரே பெருந்தொகையாய் இருந்தார்கள். ஆனல், இன்றோ பன்னிருவர்தானுமில்லை. வத்திக்கானில் வசித்துவருகின்ற கன்னியாஸ்திரிமார் சில விசேஷப்பட்டபணிகளிலே ஈடுபட்டிருக்கின்றனர். சங். பஸ்குவாலினதாயாரைத் தலைமையாகக்கொண்ட நால்வர் பரிசுத்தபிதாவின் மேல்மாடியைக் கவனித்தும், அவருக்கு உணவுசமைத்துக்கொடுத்தும் வருகின்றார்கள்.

### கம்யூனிஸ்தரை ஆசீர்வதித்தவர்

இற்றைக்கு 20 வருடங்களின் முன் தம்மைக்கைதுசெய்யவந்த கம்யூனிஸ்த படைவீரருக்குத் தமதுஆசீர்வாதம் அருளிய ஓர் ஸ்பானிய மேற்றிராணியாருக்கு இப்போது முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டுவிப்பதற்கான விசாரணை நடைபெறுகின்றது. சியுடாட்றியல் நகரின் நார்சிசோ தே எஸ்தெனகா மேற்றிராணியாரான இவர் தமது மனைக்குவெளியே தம்முடைய ஞானவிசாரணைக் குரவருடன் சுடப்பட்டார். அப்போது அவர் "தேவன் ஆசிப்பதுபோல் நடப்பதாக" என்றுசொல்லித் தம்மைச்சுடவிருந்த சிறுகூட்டம் படைவீரரை ஆசீர்வதித்தார். இவருக்கும், ஸ்பானிய உள்நாட்டுயுத்தத்தில் கொலையுண்ட மற்றும் ஐந்துகுருமார், ஐந்து பிறதர்மாருக்கும், ஓர்சாதாரண கத்தோலிக்கருக்கும் முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவிப்பதற்கான மேற்றிராசன விசாரணை நடத்தப்பட்டுவருகிறது.

### இரத்தம் உதவியடக்றர்

சுதந்திரசீனவின் தலையிடமாகிய போர்மோசாதீவிலே லோட்ரங்நகர ஆஸ்பத்திரியில் சீனநோயாளி ஒருவரைப் பார்வையிடுமாறு அன்றொருநாள் நடுச்சாமத்திலே அங்கு வைத்திய தொண்டுஆற்றிவந்த ஓர்இத்தாலியரான டக்றர் ஜியான்னெசோஅவர்கள் அழைக்கப்பட்டுச் சென்று பார்வையிட்டு, அந்த நோயாளிக்கு உடனேதானே இரத்தஞ்செலுத்த வேண்டுமென மருந்தெழுதினர். ஆனல், அங்கிருந்த இரத்தவங்கியிலே அந்தநோயாளிக்கு ஏற்றப்படவேண்டிய இனமான இரத்தம் இருப்பில் இருக்கவில்லை. அதனல், அங்குநின்றோர் சிலரின் இரத்தத்தைப் பரிசோதனை செய்துபார்த்ததில் தேவைப்பட்டஇனமான இரத்தம் டக்றருடைய இரத்தந்தானெனக் கண்டறியப்பட்டது. அதனல், அவரே வேண்டிய இரத்தத்தைத் தமது சரீரத்திலிருந்து உதவினர். அப்போது அந்த நோயாளியின் தாயான 73 வயதுள்ளபாட்டி பெரிதும் அருட்சிகொண்டவளாய்த் தனதுவீட்டிலிருந்த அஞ்ஞான விக்கிரகங்களை உடனேதானே நாசஞ்செய்துவிட்டுப் பின்னர் தேவதாயாரின்படமொன்றைக் கேட்டுப்பெற்று வீட்டிற்கொண்டுபோய்ப் பூச்சியமாக ஸ்தாபித்தாள். இந்தஆஸ்பத்திரி தேவதாயாரின் நாமத்தைக்கொண்டதாய் இத்தாலிய குருமாராலே நடத்தப்பட்டு வருகிறது.

### விடுதலையடைந்த குருவானவர்

சீனவிலே ஷாங்காய்நகரிலுள்ள கம்யூனிஸ்த சிறைச்சாலைஒன்றில் மூன்றரை வருடகாலம் சிறைவைக்கப் பட்டிருந்தபின் சமீபத்திலே விடுதலைசெய்யப்பெற்ற ஓர்யேசுசபைக் குரவரான வண. ஆர்மன்ட் புறவுல்ஸ் சுவாமியார் தம்மைத்துன்புறுத்தியவர்களின் மதியீனத்தையிட்டு மனமிரங்குவதாகக் கூறினின்றார். "1952-ம் ஆண்டு பங்குனி மாதம் நான் கைதுசெய்யப்பட்டபின் யாதாமோர் விசாரணையுமின்றியே ஏறக்குறைய மூன்றரைவருடகாலம் சிறைவைக்கப் பட்டிருந்தேன்; சென்றவருடம் கோடைகாலத்திற்கூடிய ஜெனிவாமகாநாட்டின்பின் சிகிச்சைக்காகவும், சிறந்தஉணவு கொடுபடத்தக்கதாகவும் நான் ஆஸ்பத்திரி ஒன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டேன்; இவ்விதம் என்னைக் கொழுக்கப்பண்ணிவிடலாமென்று கம்யூனிஸ்தர்கள்நம்பினர்கள்; அதனல் நான் விடுதலை செய்யப்படுமிடத்து, கைதிகளை நல்லமாதிரியாக நடத்துவதாய்த் தாங்கள் சொல்வது நம்பிவிடப்படுமென்று கம்யூனிஸ்தர்கள் நினைத்தார்கள்" எனச் சுவாமியார் கூறுகின்றார். "ஆயினும், அவர்கள் சொல்லிவரும் பொய்கள் எல்லோருக்கும் அம்பலமாகும் கடைசிநாள் வந்தேதீரும்" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

### பாப்பரசரின் பட்டாபிஷேக தினம்

பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதர் பாப்பரசராகப் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்ற பதினேழாவதுஆண்டு பூர்த்தியான தைமுன்னிட்டுச் சென்ற 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஓர் விசேஷவைபவம் நடைபெற்றதாக வத்திக்கானிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. அன்று லட்சக்கணக்கானமக்கள் ஒன்றுகூடிச் சந்தோஷ ஆரவாரஞ்செய்து பாப்பரசருக்கு வணக்கம் தெரிவித்துக்கொண்டார்கள்; அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலே நிகழ்ந்த விசேஷ வைபவத்தின்போது 51 அரசாங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், 20 கருதினல்மாரும், உலகமுழுவதிலுமிருந்து வந்த 200 அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களும் அதிற் கலந்துகொண்டார்களென்றும் தந்திச்சமாச்சாரம் சுருக்கமாகத் தெரிவித்திருக்கின்றது.

### மரித்த குருவானவரின் கண்கள்

தமது கண்கள் இரண்டையும் இரு குருட்டுப் பிள்ளைகளுக்கு மரணசாதனஞ் செய்துவிட்டுச் சமீபத்தில் இறந்துபோன வண. டொன்கார்லோ ஞோக்கியோசுவாமியாரின் கண்களைப் பெயர்த்தெடுக்கச் சத்திரவைத்தியஞ்செய்தமை சட்டவிரோதமான செயலென்று சொல்லப்படுகிறது. இத்தாலியிலே தற்போது இருந்துவருகின்ற சட்டப்படி, ஒருவர்இறந்து 24 மணிநேரத்துள் அவர்பிரேதத்தில் எந்தவிதமான சத்திரவைத்தியமும் நடத்துவது விலக்கப்பட்டதொன்றாகும். ஆனல், இறந்த ஒருவரின் கண்ணிலிருந்து 'கோர்னியா' என்ற கண்ணின் மேற்படலத்தைப் பெயர்த்தெடுத்துச் சீவந்தராயிருக்கும் ஒருவரின் கண்ணிற்பொருத்துவதற்கு 24 மணித்தியாலம் அதிகம் பிந்திப்போகும். இந்தச் சத்திரசிகிச்சை ஒருவர்இறந்ததும் உடனேதானே நடைபெறவேண்டும். அதனல், சத்திரவைத்தியம் நடத்திய டக்றர்மார் சட்டத்தை அலட்சியஞ் செய்துவிட்டு, சுவாமியாரின் கண்கள் அருளப்பெற்ற இரு குருட்டுப் பிள்ளைகளுக்கும் உடனேதானே சத்திரவைத்தியஞ் செய்து கண்களைப் பொருத்திவிட்டனர். இவர்களின் செயல் சட்டவிரோதமானதென்று சொல்லப்பட்டமையாலே அச்சட்டத்தை உடனேதானே திருத்தவேண்டுமென்ற இயக்கமொன்று தற்போது இத்தாலி முழுவதும் பரந்திருக்கிறது. குருடர்கள்மட்டிலே தங்கள் சிகிச்சையைநடத்தத் தங்களுக்குச் சுதந்திரம் அருளப்படவேண்டுமென்று இத்தாலிய டக்றர்மார் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கிடையில் அந்தக் குருட்டுப் பிள்ளைகள் இருவரும் திரும்பப் பார்வையடைந்து விட்டார்களென்று மிலான் நகரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.

---

விற்பனைக்கு:

பெரிய சனிக்கிழமைக்குரிய

**புதுத்**

**திருச்சடங்கு முறைகள்**

பிரதி விலை சதம்: 40.

தபாற்செலவு பிரத்தியேகம்

கிடைக்குமிடம்:

மனேஜர்,

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குனி மாதம்

**பொதுக்கருத்து:** பாப்பரசரின் பொதுக்கருத்துகள், விசேஷ கருத்துகளுக்காக வேண்டிக் கொள்வது.

**மிஷன்கருத்து:** மகமதியரால் சூழப்பட்ட ஆபிரிக்க வேதபோதக தாபனங்களுக்காக மன்றாடிக் கொள்வது.


சத்தியவேத

# பாதுகாவலன்

**1956-ம் ஆண்டு**
**பங்குனி மாதம் 22-ந் திகதி**


## பரிசுத்த வாரம்

மிக்கேல் ஆஞ்சலோஎன்னும் பிரபலமிக்க சைத்திரிகர் நமது இரட்சகர் சிலுவையில் அறையுண்டு மரணமடைந்த படம் ஒன்றினை வரைந்திருக்கிறார். அதிலே நமது ஆண்டவரின் கண்கள் இரண்டும் கொவ்வம் பழம்போல் சிவந்திருக்கின்றன. உதடுகள் இரண்டும் கன்றிக் கறுத்து இரத்தக்கறையாய் இருக்கின்றன. முகம் வாடி வதங்கி வெளுத்துப்போய்க் கவலையில் ஆழ்ந்திருக்கிறது. வயிறு உள்ளுக்குஒடுங்கிப்போய் விலாஎன்புகளெல்லாம் புடைப்புற்றிருக்க, மார்பு முன்னுக்கு வந்திருக்கிறது. சர்வாங்கமும் நைந்தும், பிய்ந்தும் இரத்தமயமாய் இருக்கின்றது. கண்ணுற்ரூர் எவர்க்குமே பெருங்கண்ணரூவியான —பெரும்பிரலாபகரமான காட்சியைத் தருகின்ற இப்படத்தின் மேற்புறமாக எழுதப்பட்டிருப்பதென்ன? "இதனைச் சிந்திப்பார் எவரும் இல்லை" என்பதே. ஆம், சுருக்கமான இந்தச் சுலோகத்தை சிறுகஊன்றிச்சிந்திப்பார் எவர்தான் உள்ளங்கசிந்து உருகாதிருப்பர்? உணர்ச்சி ததும்பாதிருப்பர்?

பாவத்தாலே கெட்டழிந்துபோன மனுக்குலத்தை இரட்சிக்க மனுமகனய் அவதரித்த தேவசுதன் பெரும்பாதகனைப்போல் சாவின்பயங்கர எத்தனமாகிய சிலுவையிலே இருப்பாணிகளால் அறையுண்டு, வானத்துக்கும் பூமிக்குமிடையே அந்தரத்தில்தொங்கும் பரிதாபகாட்சி பெரும்பிரலாப காட்சியன்றோ! அவரைக்காட்டிக் கொடுத்த துரோகியான யூதாஸே பிரதானஆசாரியர்களுக்கும், மூப்பர்களுக்கும்முன்பாகச்சென்று: "குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்துப் பாவங்கட்டிக்கொண்டேன்" என்று கூறியவாக்கும், அவருக்கு மரணத்தீர்வையிட்ட போஞ்சியு பிலாத்துவே யூதசனங்களுக்குமுன்பாக, "இந்த நீதிமானுடைய இரத்தத்தின்மட்டில் நான் குற்றமற்றவனய் இருக்கிறேன்" என்று கூறியவாக்கும் அவர் மாசற்றவர்என்பதை நிரூபிப்பனவாகும். ஆயினும் இவைகளை ஆழ்ந்து யோசித்து, அவ்விதம் மாசற்றதேவன் நம்மை இரட்சிப்பதற்காகவே கொடிய வாதைகளுக்கும், கோரமரணத்துக்கும் உள்ளானரென்பதை ஊன்றிச்சிந்திப்பாரும், தங்கள் பாவங்களுக்காக மனம்நொந்து கொள்வாரும் நம்முள் எத்தனை பேர்?

இவ்வருடம் பரிசுத்தவாரத் திருச்சடங்குகள் ஆதிகாலத்து ஆசாரமுறைக்குத் திரும்பவும் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. அக்காலத்திலே அநேக நூற்ருண்டுகளாகப் பெரியவியாழன், பெரியவெள்ளி, பெரிய சனித் திருச்சடங்குகளெல்லாம் அவைகளாற் குறிக்கப்படும் இரட்சணிய திருச்சம்பவங்கள் நிகழ்ந்தநேரமாகிய மாலையிலேயே நடைபெற்று வந்தன. ஆனல், மத்திய நூற்ருண்டுகளிலே பலகாரணங்களை முன்னிட்டும் இந்த மாலைத்திருச்சடங்குகள் காலைத்திருச்சடங்குகளாக மாற்றப்படலாயின. அதனல், இத்திருச்சடங்குகளால் ஞாபகப் படுத்தப்பட்டுவந்த இரட்சணிய சம்பவங்கள் மக்கள் உள்ளங்களில் பிறப்பிக்கவேண்டிய அர்த்தபுஷ்டியான நல்லுணர்ச்சிகளையும், அவற்ருல்வரக்கூடிய ஆன்மநன்மைகளையும் சரிவரப்பிறப்பியாததுகண்ட பரிசுத்த பாப்பரசர் பழைய ஆசாரமுறையை நடைமுறைக்குக் கொண்டுவந்திருப்பது பாராட்டத்தக்கதே. ஆதலால், இந்தமுறையை மேற்கொண்டு, அந்தந்த நேரத்தை மனதிற்கொண்டு, திருச்சடங்குகளால் குறிக்கப்படும் இரட்சணிய சம்பவங்கள் அவ்வப்போதே நிகழ்வதாகத் தியானித்து நாம் பரிசுத்தவாரத்தை நன்கு பயன்படுத்திக்கொள்வோமாக!

### வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சி

—:—

கொழும்பு, மேட்டுத்தெரு அர்ச். அந்தோனியார் பாடசாலை, அர்ச். அன்னம்மாள் பாடசாலை மாணவர், மாணவிகளால் நிகழும் பங்குனிமாதம் 30-ந் திகதி (பெரிய)வெள்ளிக் கிழமை காலை 9 மணி தொடங்கிப் 10 மணிவரை "மனுக்குலத்தின் இரட்சணியம்" என்ற கத்தோலிக்க நாடகம் வண. ஜே. எம். சவிரிமுத்து சுவாமியவர்களின் தலைமையில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும்.

# ஓர் இரவில்

— எஸ். அமல், B. Sc. —

அன்றிரவு பரீஸ்நகரில் மக்கள்என்றுமே அறியாத குளிர். பாத்திரங்களில்இருந்த தண்ணீர் உறைந்துவிட்டது. அந்தஇரவிலே வானொலியில் ஒருவர் பேசினர். "இன்றிரவு 17 மக்கள் குளிரால் உறைந்து மாண்டனர்; ஒருதாய் சாலையோரத்தில் கிழிந்தசாக்கின்மேல் ஒருமகவைப் பெற்ருள்; பரீஸ்நகரமக்களே! நீங்கள் சுகமாக உறங்கவேண்டாம்; உங்கள்வீட்டில் பெட்டிகளிலிருக்கும் பொருள்களைக்கொடுத்து உதவுங்கள்; உடனே உதவி."

அவரது பேச்சுமுடிந்து அரைமணி நேரம்ஆகவில்லை. பரீஸ்நகர பாந்தியன் சந்தியில் நிறையக்கார்கள் நின்றன. அமைச்சர்கள் சிலரும், சினிமாநடிகர்களும் அங்கு காணப்பட்டனர். கார்கள் வீதிகளைச்சுற்றின. வீடில்லாமல் தெருவில்திரியும் இரண்டாயிரம்பேரை அன்றிரவே கண்டனர். பாலங்களின் அடியில், சாக்கடைக்குழிகளில், குப்பைத்தொட்டிகளுக்குப்பின்னல் குளிருக்கு மறைந்து இருந்தவர்களுக்குப் புதுஉடைகள், சூடான உணவுகள், உறைவிடங்கள் தரப்பட்டன. வானொலியில்கேட்ட அந்தஅபயக்குரலின் பயனகப்பதினையாயிரம்கம்பளிகள், ஆயிரம் ஆடைகள், ஆருயிரம் மேலாடைகள், பதினயிரம் செருப்புகள், ஆருயிரம் கம்பளிச்சட்டைகள், ஆயிரம்அடுப்புகள், பலதொன் உணவுப்பொருட்களும், ஏறக்குறைய ஒருகோடிரூபா பணமும் கிடைத்தன.

அடைபட்டிருந்த தாராளகுணம் கரைபுரண்டோடியது. இராணுவ லொறிகள் பொருட்களைக்கொண்டுவர ஓடின. மருத்துவநிலையங்கள் உறைவிடம்கொடுத்து உதவின. காலியாகக் கிடந்த புகையிரதநிலையங்கள், அலுவலகங்கள் எல்லாம் பொதுமக்களுக்குத் திறக்கப்பட்டன. தீயணைக்கும்தோழர்கள் தீமூட்டிச் சமையல்செய்ய இணங்கினர். வீடுகட்டுவதற்கு இரண்டு கோடிரூபா கடன்கொடுக்கத் தயங்கிய பரீஸ்நகரசபை மறுநாளே பன்னீராயிரம்வீடுகள்கட்ட 20கோடிரூபாகொடுக்கத் தீர்மானித்தது. பரீஸ்நகரமக்களின் உள்ளத்திலே புதிய உணர்ச்சியைத் தட்டியெழுப்பினர் பியர்என்பவர்.

பியர் பிரான்ஸ்தேசத்தில் 1912-ம் ஆண்டு ஒருசெல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். இளமைப் பருவத்திலே அர்ச். பிரான்சீஸ் அசீசியாரின் வாழ்க்கைவரலாற்றைப் படித்தார். அந்த வாழ்க்கையையே தமதுவாழ்வின் வழிகாட்டியாக வைத்துக்கொண்டார். பிரான்சீஸ் அசீசியாரின் வாழ்க்கையைப்படித்ததால் உயிர்களிடம்அன்பு, எளியோரிடம்இரக்கம், கடவுளிடம் அதிகஅன்புமுதலிய உயர் பண்புகள் இளமைமுதல் அவர்உள்ளத்தில் வேரூன்றிவளர ஆரம்பித்தன.

இவர் 18வயது அடைந்ததும் தமக்குரிய சொத்தின்பாகத்தை ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டுத் துறவறம் பூண்டுவாழ்ந்தார். உடல்நலம்குன்றி வருந்தியதால் சந்நியாசவாழ்க்கையைக் கைவிட்டு ஓர் மேற்றிராசன குருவானர்.

இரண்டாவது உலகப்போரில் பிரான்ஸ்தேசம் ஜேர்மனியரால் தாக்கப்பட்டு எதிரிகள் கைப்பட்டது. அப்பொழுது பியர்சுவாமியார் தம்நாட்டு மக்கள் எதிரிகளிடமிருந்துதப்ப உதவி வந்தார். இத்தாலியரால் இவர்கைது செய்யப்பட்டார். சிறையா! நீலநிற வானத்தை—அதில் நீந்திவிளையாடும் வெண்ணிலாவைக் காணமுடியாதே; ஏழைகளுக்குஉதவ வழியிருக்காதே என்று ஏங்கினர். எனவே, சிறைஅதிகாரிகளை ஏமாற்றி விடுதலைபெற்ருர். பின்பு ஜேர்மனியர்கையில் அகப்பட்டார். அப்போதும் சிறையிலிருந்து தப்பிச்செல்லுந்திறமை இவரிடமிருந்தது. அக்காலத்தில் ஒருவரை மலைப்பாங்கான இடத்தின்வழியாகப் பல மைல் தூக்கிச்சென்று அவன்உயிரைக் காப்பாற்றினர்.

யுத்தம்முடிந்ததும் இவர் பிரான்ஸ் தேச சட்டசபையில் இடம்பெற்ருர். அப்பொழுதும் ஒருசிறு லொறியை ஓட்டிச்சென்று ஏழைகளுக்குப் பணமும், பொருளும் திரட்டுவார். இவர் உயர்ந்தபதவியைவிரும்பவில்லை. ஏழைகளுக்கு வாழ்வளிக்க வேண்டும்என்பதே அவர் கனவாகும்.

ஒருநாள் பொலிஸ்காரர் ஒருமனிதனைப் பிடித்துவந்தனர். அந்த மனிதன் செய்த குற்றம், பொதுஇடத்தில் ஓர் குழிதோண்டியதே. தானும், தன் மனைவியும், சிறுகுழந்தையும் தங்க இடமில்லாது குளிரிலேநடுங்கியதால ஒருகுழி தோண்டி, அதில் குளிருக்குமறைந்திருக்க அவன்விரும்பினன். இன்னும்பல குடும்பங்கள் வீடின்றித் தவிப்பதைப் பார்த்தார் பியர்சுவாமியார். உலகிற்சிறந்த பரீஸ்நகரில் 2 லட்சம் மக்கள் வாழ்க்கைநடத்த முப்பதினயிரம் வீடுகள் தேவை. அறுபதினயிரம் குடும்பங்கள் சிறுஅறைகளிலே வசிக்கின்றன. ஒருலட்சம் இளம்தம்பதிகள் தனிக்குடித்தனம்நடத்த வீட்டுவசதியில்லை. இதன்விளைவாக ஆண்டுக்கு 50 தற்கொலைகள் நடக்கின்றன. இவற்றையெல்லாம்அறிந்த பியர்சுவாமியார் வருந்தினர்.

அல்லலுறும் மக்களுக்கு ஆதரவளிக்கவிரும்பி ஒருவீட்டை வாங்கினர். ஆகாரமளிக்கச் செல்வந்தர்வீட்டிலுள்ள குப்பைத்தொட்டிகளைச் சுத்தஞ்செய்யும் பொறுப்பை ஏற்ருர். குப்பையிலுள்ள காகிதம், இரும்புத்துண்டுகள், எலும்புகள், சீசாக்கள்முதலியவற்றைச் சேகரித்துவிற்பார். இன்று இவ்வேலைக்கென 20லொறிகள்ஓடுகின்றன. மாதம்ஒன்றுக்கு முப்பதினயிரம்ரூபா வருமானமும் வருகிறது. எல்லாம் ஏழைகளுக்கே. இன்று பரீஸ்நகரிலுள்ள ஹோட்டல்கள், தியேற்றர்களின்முன் அவருடைய பெட்டிகளைக் காணலாம். ஒருபெட்டியில் பதினறுயிரம்ரூபா மதிப்புள்ள ஒரு வைரமோதிரத்தை யாரோ போட்டிருந்தனர்.

துன்பச்சுமைகளைத் தாங்கிநிற்கும் மக்களுக்குஇன்பவழிதேட, அடிமைத்தளையை அகற்ற, உரிமைச்சங்கூஊத, வெற்றிமுரசுகொட்ட இன்று பலர் பியர்சுவாமியாருடன் உழைக்கின்றனர். உயர்ந்தபதவி வகிப்பவர்கள், செல்வந்தர்கள் 'பதவி வேண்டாம்', 'சொத்து வேண்டாம்' என்று எல்லாவற்றையும்விட்டு ஏழைகளுக்காக உழைக்க முன்வந்துள்ளனர்.

"கடவுள் விண்ணுலகத்தில் மட்டுமல்ல, உங்கள்மத்தியில்வாழும் ஏழைகள் உள்ளத்திலும் இருக்கிருர்;" நமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமதி அன்னம்மா மனுவேற்பிள்ளை அவர்களின் பிரிவு

ஊர்காவற்றுறை, கரம்பனைச் சேர்ந்த சரவணமுத்துடையார் வழித்தோன்றலும், ஸ்ரீ ச. ம. மனுவேற் பிள்ளை அவர்களின் பிரிய பாரியாரும், கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் ஆசிரிய கலா சாலைத் தாபனத்தலைவர் வண. ம. யோ. மரியாம்பிள்ளை சுவாமியவர்களின் அருமைத் தாயாருமான ஸ்ரீமதி அன்னம்மா மனுவேற்பிள்ளை கடந்தஇரு வருடங்களாகப் பாரிசவாத நோயாற் பீடிக்கப்பட்டிருந்து, சென்ற 14-3-56 புதன்கிழமை மாலை 5 மணியளவில் இனசனர் சூழ்ந்துநின்று செபஞ்சொல்ல, தமது ஏககுருபுதல்வர் கடைசி ஆசீர்வாதங் கூறிநிற்கப் பரமபதமடைந்தார். மரிக்கும்போது இவவுக்குவயது 63.

பிரேதசேமம் மறுநாட்சாயந்தரம் கொழும்பு, யாழ்ப்பாணம், கரம்பன், நாரந்தனையாதியாம் பலவிடங்களிலுமிருந்து வந்த இனசனரின் பிரலாபமத்தியில் நிறைவேறியது. அவ்வமையம் இருபத்தேழுகுருமார், முப்பது கன்னியாஸ்திரீமார், கொழும்புத்துறைத்தாபனப் பேராசிரியர், ஆசிரியமாணவர் மாணவிகள், குருமடத்துமாணவர் முதலானோர் துக்கசங்கீதம்பாடியும், செபித்தும்செல்ல, அர்ச். தேவமாதாவின் ஆலயத்தில் நடந்தேறிய ஈமச்சடங்குகளின்பின் கத்தோலிக்க சேமக்காலையில் அவ நல்லடக்கஞ் செய்யப்பட்டா.

இவவைஇழந்து துயருறும் நாயகர், குருபுதல்வர், மற்றும் இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

---

நாகரீகத்தின் உயர்வைப்பற்றி நீங்கள் படிப்பது உண்மையல்ல ; ஏனெனில், அது துன்பத்தில்உழலும் மக்களைப் பற்றி ஒன்றுமே தெரிவிப்பதில்லை.'' ''யுத்தம் வருமென்று நமது வாலிப மாணவர்கள் தயார் செய்கிறார்கள் ; அழிவுவேலையில் அவ்வளவு ஆர்வம் ; இளைஞர்களே, உங்கள்வாழ்வில் ஒரு ஆண்டை ஏழைகளுக்கு இல்லங்கள் அமைக்க, எளியவர்களுக்குக் கல்வி புகட்டச் செலவிடக்கூடாதா ?'' என்று பியர்சுவாமியார் கேட்கிறார்.

ஒரேஇரவில் உலகப்புகழ்பெற்றவர் இவர். சிலமாதங்களுக்குமுன் உலக மக்கள்அறியாத பியரின்உருவப்படங்களைப் பரீஸ்நகரில் இன்று எந்தச்சுவரிலும் பார்க்கலாம். அவர்புகழ் ஐரோப்பாவைக்கடந்து அமெரிக்காவையும் எட்டிவிட்டது. அதன்பயனுக அமெரிக்கமக்களின் அழைப்பிற்குஇணங்கி அங்கே பொதுமேடைகளில் தமது கருத்துகளை அளித்துவருகிறார் பியர் சுவாமியார்.

— முன்னேடி



## திருச் சிலுவை

— 1 —

அன்பு கனிந்த சிலுவைஇது — மகனே !
அருளைப் பொழிந்த சிலுவைஇது
துன்பந் தொலைத்த சிலுவைஇது — மலைமேல்
தூயோன் சுமந்த திருச்சிலுவை.

— 2 —

பாவந் துடைத்த சிலுவைஇது — மகனே !
பாரம் மிகுத்த சிலுவைஇது
சீவன் கொடுத்த சிலுவைஇது — மரியாள்
செல்வன் துடித்த திருச்சிலுவை.

— 3 —

உதிரம் வழிந்த சிலுவைஇது — சுதனுர்
உள்ளம் பிழிந்த சிலுவைஇது
கதியைத் திறந்த சிலுவைஇது — மகனே !
கர்த்தன் மரித்த திருச்சிலுவை.

---

## பரிசுத்தம்

''பரிசுத்தம் உண்மையான ஆரோக்கியம்''

''பரிசுத்தத்தால் மனம்மலரும் ; முகம் மலரும்''

''பரிசுத்தம் பலம்தரும் ; பலவீனத்தை அகற்றும்''

''பரிசுத்தம் உன்னைப் பயமற்றவனுகச் செய்யும்''

''பக்குவமாவதற்குப் பரிசுத்தமே அத்திவாரம்''

''பரிசுத்தமான இருதயத்திற் கவலை இல்லை''

''மனம், வாக்கு, காயம் என்ற மூன்றிலும் எல்லா இடங்களிலும், சந்தர்ப்பங்களிலும் பரிசுத்தமாக இரு''

''பரிசுத்தத்துடன் நீ எதைச் செய்தாலும் அது.பிரகாசிக்கும்''

''அகங்காரத்தை அகற்று. பரிசுத்தம் சுடர்விடும்''

---

## —: விகடம் :—

தாயாருடன் மிருகக்காட்சிச் சாலைக்குச் சென்ற சிறுவன் :

அம்மா ! அந்தக் கருங்குரங்கைப் பார். எங்கள் மாமாவைப்போல் இருக்கிறது.

தாயார் : அட அசடே ! அப்படிச் சொல்லாதேடா.

சிறுவன் : ஏனம்மா ? நான் சொல்றது குரங்குக்குப் புரியுமா ?

● ● ●

டக்றர் : நீ இந்த மருந்தைச் சாப்பிடு, மூன்று நாளைக்குப் பத்தியமாய் இருக்க வேண்டும்.

நோயாளி : நான்நேற்று இராத்திரி சாப்பிடயில்லையே, அதையும் சேர்த்துத் தானே மூன்றுநாள்.

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

அர்ச். சூசையப்பர் திருநாள் : மட்டக்களப்பு, தாண்டவன்வெளிப் பரிசுத்த வியாகுலமாதாகோவில் பங்கைச் சேர்ந்த யோசெவ்என்னும் நாமங்கொண்ட பக்தியுள்ளகிறிஸ்துவர்கள் அர்ச். சூசையப்பர் திருநாளையும், அதற்குமுந்திய நாளையும் வெகுபக்திச் சிறப்புடன் விமரிசையாகக் கொண்டாடினர். முந்தியநாள் பி. ப. 6-30 மணிக்குச் செபமாலை, பிரார்த்தனைக்குப்பின் கிறிஸ்துவர்கள் தங்கள்கையில் மெழுகுவர்த்திஏந்திப் பாமாலைபொழிந்து செல்ல, அர்ச். சூசையப்பர் திருச்சுரூபம் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச் செல்லப்பட்டது. கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமீயவர்களால் பிரசங்கஞ் செய்யப்பட்டது. பின்னர் அதிவண. ஆர். எம். வெண்னம்புஸ், வண. ஜி. ஈ. எல். வம்பேக், வண. எல். அல்பகூக் சுவாமிகளால் மாலையாராதனை பாடப்பட்டது. திருநாளன்றுகாலை திவ்வியபாடற்பூசை நிறைவேறியது.

அர்ச். சூசையப்பர் வயோதிபர்மடம் : மட்டக்களப்பு, தாண்டவன்வெளியில் நவமாய் அமைக்கப்பட்ட அர்ச். சூசையப்பர் வயோதிபர் மடத்தில் அர்ச். சூசையப்பர்திருநாளன்று வெகு சந்தோஷகரமான விடயங்கள்பல நடந்தேறின. அன்றுமதியம் 12-30மணிக்கு வண. கட்டளைக்குரவர் ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களும், வறியோரின் சிறிய சகோதரிகளின் சங். பெரிய தாயாரும் மகாவந். திரிகோணமலை மேற்றிராணியாண்டவர் அவர்களை வரவேற்றனர். பின்னர் மதியப்போசனம் ஆண்டவர்அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டதும், இடைத்துண்டு அணிந்துகொண்ட ஆண்டவர்அவர்களும், அதிவண. ஆர். எம். வெண்னப்புஸ், கட்டளைக்குரவர் வண. வம்பேக், சங். பெரியதாயார், சங். மடஅதிபர்தாயார் அவர்களும் உணவுபரிமாறி அங்குள்ள வயோதிபரை மகிழ்வித்தனர். பி. ப. முறையே வண. வம்பேக், வண. டெல்மாமோர் சுவாமிகள் துணைபுரிய, மேற்றிராணியாண்டவரால் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது.

— நிருபர்

---

● பிரான்சிலே சென் நெக்ரெயர் எனுமிடத்திலுள்ள செங்நீரூற்று தனது ஊற்றுத் தண்ணீரில் வீசப்படும் எந்தப் பொருளையும் வெண் சிவப்பு நிறமான கல்லாக மாற்றிவிடுகிறதாம்.

## வேண்டுதல்

வண. M. J. மரியாம்பிள்ளை சுவாமியார் தமதுதாயாரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி தமது இனசனரையும், நண்பர்களையும் விநயமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றூர்.

---

## பாலியன் அளித்த பதில்

பரிசுத்தபாப்பரசர் சென்றவருடத்தில் ஓர்நாள் பிழையான கேள்விஒன்றைக் கேட்டுவிட்டாராம். அதற்குப் பாலியன்ஒருவன் தக்கபதில் அளித்தானும். இதுபற்றியசம்பவம் பின்வருமாறு சொல்லப்படுகிறது. காஸ்தெல்–கான்டல்போவிலுள்ள தமது கோடைகால வாசஸ்தலத்திலே பாப்பரசர் வாரமிருமுறைஅளிக்கும் பேட்டிகளுள்ஒன்றிலே இச்சம்பவம் நிகழ்ந்தது. அவரைப் பேட்டிகாணவரும் யாத்திரிகர்களில் பலகாலும் பிள்ளைகளின்குழுக்கள் காணப்படும். வழமையாக இப்பிள்ளைகள் ஏதோஒரு பாடசாலை, அல்லது அநாதசாலைகளிலிருந்தும், காலத்தோறும் பாப்பரசின் கோடைகால முகாங்கள் பலவற்றுள் ஒன்றிலிருந்தும் போவார்கள். பேட்டியின்போது அவர் பிள்ளைகளிடம் பல கேள்விகளும் கேட்க ஆசிக்கின்றூர். அவர்களும் ஒரேகுரலாய்ப் பதிலிறுப்பார்கள். கோடைகால முகாங்களிலிருந்து செல்லும்பிள்ளைகளிடம், ''நீங்கள் சந்தோஷமாய் இருக்கிறீர்களா ?'', ''உங்களுக்குச் சாப்பிடப் போதியதுஉண்டா ?'' என்று அவர் கேட்பார். அப்போதுஅவர்கள் ''ஆம், ஆம்'' என்று பேரொலியாய் அவர்வதனம் மலரும்படியாகப் பதிலளிப்பார்கள். ஓர்முறைஅவர், ''வீட்டுப்பாடம் கொஞ்சமாவது படிக்கிறீர்களா ?'' என்று வினவினர். ''இல்லை'' என்ற பேரொலிபிறந்தது. அதைத்தொடர்ந்து, ''பரிசுத்தபிதாவே ! இது விடுமுறைகாலமென்று தங்களுக்குத் தெரியாதா ?'' என்ற ஓர்சிறுஓசைபிறந்தது.

---

## வெள்ளியூபிலி விழா

புத்தளம், சென் அண்ட்றூஸ் கல்லூரிஅதிபரும், அப்பகுதிக் கிறிஸ்தியன் பிறதர்மாரின் சிரேஷ்டருமான சங். பிறதர் மொடஸ்ரஸ்அவர்கள் தமது சந்நியாச 25-ம்வருட வெள்ளி யூபிலி விழாவைச் சென்ற 19-3-56 திங்கட்கிழமை ஆடம்பரமற்றமுறையில் கொண்டாடினர். அவருடன் சந்நியாச அந்தஸ்தில் பிரவேசித்தவரும், தற்போது சிலாபம் சென் மேரிஸ்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுபவருமான சங். பிறதர் ஆம்புறோஸ் அவர்களும் அன்றுதினமே வெள்ளி யூபிலிவிழாவைக் கண்டுகளிக்கும் பாக்கியம் பெற்றிருந்தார். அன்றுதினம் புத்தளம், சென் அண்ட்றூஸ் கல்லூரிக்கும், சிலாபம், சென் மேரிஸ் கல்லூரிக்குமிடையிலே சென் மேரிஸ்கல்லூரிமைதானத்தில் ஓர் உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்றது. அன்றிரவு இரு யூபிலிநாயகர்களையும் கௌரவிக்கும்முகமாகச் சிலாபத்தைச்சேர்ந்த பிறதர்மாரால் ஓர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது சுற்றுப்பிரயாணம்

பேசாலைப் பாத்திமாபாடசாலை மாணவராகிய நாங்கள் 32 பேர் எங்கள் ஆசிரியர்களின் துணையுடன் சரித்திர, பூமிசாஸ்திர, குடியியல் சம்பந்தமான சுற்றுப்பிரயாணமொன்றை வெற்றிகரமாக நடாத்தினேம். ஏட்டுப்படிப்புடன் கண்டறிதலும் வேண்டுமென்ற உண்மையையும் உணர்ந்தோம்.

அன்று புதன்கிழமைகாலை 10 மணியளவில் வெற்றிநாயகியை வழிபட்டுக் கொண்டு வண. எஸ்.ஜி. இல்லறிசுவாமியவர்களுடைய நல்லாசியுடன் மருதமடுப்பதியடைந்தோம். மதியபோசனத்தின்பின் யாத்திரிகர்களின்இராக்கினியை எம்பிரயாணத்திற்குத் துணையாக்கிக்கொண்டு மீண்டும் புறப்பட்டோம். எமதுவாகனம் வரண்டவனங்களையும், இருண்டகாடுகளையும் தாண்டி இரவு 8 மணியளவில் சிலாபத்தையடைந்தது. ஆங்கு தமிழ்ப் பாடசாலைஅதிபர் சங். சகோதரர் போல் பீரிஸ்அவர்கள் எம்மைமவரவேற்று மாலையுணவளிக்க, மகிழ்ச்சியுடனருந்தி நித்திரைக்குச்சென்ருேம். அதிகாலையிலெழுந்து பாடசாலைச்சின்னம் எமதுமார்பை அலங்கரிக்க வாகனமேறினேம். வேகமாகச்சென்றஇரதம் நீர்கொழும்பு, சம்மனசுசுவாமிகளின்ஆலயத்தில் எம்மை இறக்கியது. ஆலயத்தின்அழகை வியந்துகொண்டே காலையாகாரமருந்தியபின் தலைநகரை நோக்கிப் பிரயாணமானேம். காற்றினும் கடுகிச்சென்ற பஸ்வண்டி விக்ரோறியாப்பாலத்தைக் கடந்ததும், எறும்புக்கூட்டங்கள்போல் ஊர்ந்துசென்ற மோட்டார்ரதங்களும், தண்டவாளத்தின்மேல் வண்டவாளத்துடன்சென்ற திரும்வண்டிகளும், மின்சாரத்தின் உதவியுடன் தண்டவாளமின்றிச் சென்ற ரேலிபஸ்களும் இதுதான் கொழும்புஎன்று அறிவுறுத்தின.

வானத்தையளாவிய வர்த்தகஸ்தாபனங்களும், அழகேயுருவாய அடுக்கு மாளிகைகளும் சணப்பொழுதில் தோன்றிமறைய, லேக்கவுஸ் காரியாலயத்தையடைந்தோம். ஆங்கு அதிகாரிகள் எம்மைவரவேற்றுத் திரு. லெஸ்லி சில்வாஎன்பாரை எம்முடன் அனுப்பினர். அவரும், அவரின்உதவியாளருமாக எழுத்துகள் விரல்களால் தொட்டமாத்திரத்தே ஈயத்தகடுகளாக மாறுவதையும், அவைபின்னர் ஈயச்சுருள்களாகமாறித் தாமாகவே அச்சடிக்கும்எந்திரத்துக்குச் செல்வதையும், பின்னர் இந்தஎந்திரம் தானேஇயங்கிப் பத்திரிகையைஅச்சடித்து வெட்டி மடித்து அடுத்தஅறைக்கு அனுப்புவதையும்விளக்க, வியந்துகொண்டே வெளிகொண்டோம். அதன்மேல் பாராளுமன்றக் கட்டடங்களைப் பார்வையிட்டுக்கொண்டேசென்று மதியப்போசனத்தை முடித்துக்கொண்டு நூதனசாலையை அடைந்தோம்.

ஆதிகால வரலாறுகளையெல்லாம் எடுத்தியம்பும் அற்புதங்களையும், கண்டிக்கடைசியரசனின் கலையார்வத்தை இன்னும்பல தலைமுறைகட் கெடுத்தோதும் அற்புத அரசசின்னங்களையும் தரிசித்தபின் தாகசாந்திசெய்துகொண்டு ரொறிங்ரன் சதுக்கத்தை நோக்கிச் சென்ருேம். சுதந்திரமண்டபத்திற்கெதிரே எம்வண்டி தரிக்க, திரண்டெழுந்து பிரவாகிக்கும் சமுத்திரஅலைகளையொத்த மாபெருங் கூட்டத்தினடுவே நாம்வழிதவருது விழிப்புடன்காவல்புரிந்த ஆசிரியர்கள்துணையுடன் இராசிய உணவு – விவசாயப் பொருட்காட்சியைப் பார்வையிட்டோம். அங்கிருந்த மணிமாடங்களையும், அவைதாங்கிநின்ற அற்புதகாட்சிகளையும் ஆசிரியர்கள் விளக்கக்கேட்டதும் எம்மவரிற்பலர் தம்குறிப்புப் புத்தகங்களை நிரப்பிக்கொண்டனர். அம்மாபெருங் காட்சியில் தனிப்பெருமை கொண்டிலங்கிய இந்திய மண்டபத்தையும், அமெரிக்காகொண்டுவந்த ரெலிவிஷன் காட்சியையும் வியந்துகொண்டே இரவு 8 மணியளவில் டிலாசால் கல்லூரியையடைந்து இராப்பொழுதைக் கழித்தோம்.

அதிகாலையில் மீண்டும் புறப்பட்டு ரெம்பிள்றீஸ், இராணிமாளிகைவழியாக இரத்மலானை விமானதளத்துக்குச் சென்ருேம். அங்கு விமானமொன்று புறப்பட்டுச்செல்லும் விதத்தைக்கண்டபின் அதிகாரியொருவர் எம்மைஅழைத்துச்சென்று பல்வேறு விதமான விமானங்களையும், அவற்றின் தன்மைகளையும் எடுத்துக்காட்டினர். பின்னர் உலகப்பிரசித்திபெற்ற கந்தாவளைக்குச்சென்று இலங்கையின் மதிப்பிற்குரிய பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்களைச்சந்தித்தோம். எம்முடன் சற்றுநேரம் அளவளாவியபிரதமர் தோட்டத்தைப் பார்ப்பதற்கு உத்தரவளிக்கவே யாவற்றையும் பார்வையிட்டுக்கொண்டு நுகேகொடைக்குச்சென்ருேம். அங்குள்ள சுபத்திரா ராஜகிரிய விகாரையில் புத்தரின்சரிதையை உருவங்களால் செதுக்கியிருப்பதை வியந்துகொண்டே தெகிவலைக்குத்திரும்பி மதியபோசனத்தை முடித்துக்கொண்டோம்.

அதன்மேல் மிருகக்காட்சிச்சாலையைத்தரிசித்து, யானைகளின் நடனக் காட்சிகளைக் கண்டு மகிழ்ச்சியுடன் கொழும்புத்துறைமுகத்தை யடைந்தோம. மகாராணி எலிசபேத்அவர்களால் திறந்துவைக்கப்பட்ட எலிசபெத் இறங்குதுறையையும், பாரிய வர்த்தகக் கப்பல்களையும், இன்னும்அநேககாட்சிகளையும் கண்டபின்னர் கால்பேஸ் மைதானஞ்சென்று சற்றுநேரம்இளைப்பாறி மீண்டும் டிலாசால் கல்லூரியை அடைந்துதங்கினேம். அதிகாலையில் கல்லூரிஅதிபர்க்கு நன்றிகூறிவிட்டுக் காலை 9 மணியளவில் கந்தானை, சுதேசி இண்டஸ்றியல் ஸ்தாபனத்தையடைந்து சவர்க்காரம், தீப்பெட்டி, பிளாஸ்ரிக்பொருட்கள் என்பன தயாரிக்கப்படும் முறைகளை அங்குள்ளார் விளக்கக்கேட்டு ஞாபகார்த்தமாகச் சிலபொருட்களையும் வாங்கிக்கொண்டோம். பின்னர் சிலாபத்தில் மதியப்போசனம்முடித்துக்கொண்டு திரும்பும் வழியில் பரிசுத்தபாப்பரசரின் ஸ்தானுபதியும், எம்மேற்றிராணியாரும் எதிர்ப்படவே, அவர்கட்கும் எம்வணக்கத்தைத் தெரிவித்தோம். பின்னர் தம்பபண்ணியைத்தாண்டி அநுராதபுரியினூடாக மதவாச்சியையடைந்து தேநீரருந்தியபின்னர் புறப்பட்டு இரவு 9 மணியளவில் பேசாலையை அடைந்தோம்.

இப்பெரும் பிரயாணத்தின்மூலம் நாமடைந்த நன்மைகளோ அளவில. மிகச்சிரமத்துடன் இச்சுற்றுப்பிரயாணத்தை வெற்றிகரமாக நடாத்திமுடித்த எம்தலைமையாசிரியர் திரு. அ. சிங்கராயர்அவர்கட்கும், மற்றும் துணையாசிரியர்கட்கும் எம்மனமார்ந்த நன்றிஉரித்தாகுக.

— ஓர் சிரேஷ்டவகுப்பு மாணவன்

# பரிசுத்த பாப்பரசரின் ஜனனதின - மகுடாபிஷேகதின விழாவைபவம்

வத்திக்கான் இராச்சியத்திலே இதுபோலும் ஓர்பிறந்தவிழா இதற்குமுன் ஒருபோதுமே கொண்டாடப்படவில்லையென்று சொல்லும்படியாகப் பரிசுத்தபிதா 12-ம் பத்திநாத பாப்பரசரின் பிறந்தவிழா அத்துணை பெருஞ்சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. அவர் வழமைபோலத் தமது சின்னக் கோவிலிலே திவ்வியபூசைநிறைவேற்றி அன்றையசுபதினத்தை ஆரம்பித்தார். ஆனல், அன்றுதினம் பலிபீடம்மாத்திரம் 80 சிவந்தரோசாமலர்களால் சிங்காரிக்கப்பட்டிருந்தது. அதன்மேல் அவர் செய்யவேண்டிய கடமைப்பணிகள்இருந்தன. எனினும், அன்றுகாலை அதிகநேரத்துடனேயே முதலாவது பிறந்தபெருநாள்கோஷ்டி அவர் சமுகம் வந்துவிட்டது.

200 இத்தாலிய பிள்ளைகளும், பிறநாடுகளைச்சேர்ந்த 24 பிள்ளைகளும் அவர்முன் சோபனகீதங்கள் பாடுதற்கென வந்திருந்தார்கள். "எமது பரிசுத்தபிதாவாகிய பத்திநாதருக்காக மன்ருடுவோமாக" என்பனபோன்ற கீதங்களை அவர்கள்பாடினர்கள். "சர்வதேசங்களினதும் விருப்பங்கள்" என்னும்கானத்தை அப்பிள்ளைகள் ஆங்கில, பிரான்சிய, ஸ்பானிய, ஹங்கேரிய, ருஷிய, இந்தோனேஷிய, ஜேர்மனிய, டேனிஷ், போலிஷ், டச், ஐரிஸ் பாஷைகளில் இன்பமாகப் பாடினர்கள். ஈற்றில் "தங்களுக்கு ஜனனதின சோபனம்" என்னும் அன்புணர்ச்சி பெருகும் கானத்தை அவர்கள் திரும்பத்திரும்பப் பாடிக்கொண்டே பரிசுத்த பிதாவைச்சூழவா வட்டவடிவமாக நடனமாடினர்கள்.

பின்பு அவர்களில் அதிகம்இளவயதுள்ள பிள்ளை ஒன்று வெள்ளை 'லிலாய்க்' என்ற பூமரக்கிளைகளைக் கொண்டு சென்று பாப்பரசரின்கரங்களில் கொடுக்கவே, அவர் அவைகளைப்பெற்றுக் கொண்டு தமதுசிம்மாசனத்திலிருந்து அவர்களையெல்லாம் ஆசீர்வதித்தார். அதன்மேல் ஓர்சிறுவனும், ஓர்சிறுமியும் அவர்முன்சென்று 80 மெழுகுவர்த்திகளுடன்கூடிய பிறந்த பெருநாள் "கேக்" ஒன்றை அவருக்குஅன்பளிப்புச்செய்தார்கள்.

பிள்ளைகளைத்தொடர்ந்து கருதினல்மார்வந்தார்கள். ரோமாபுரியில் வசிக்கும் கருதினல்மாருடன் ரொறன்ரோநகர கருதினல் மைக்குயிக்கன், கொலோன்நகர கருதினல் பிறிங்ஸ், அந்தியோக்நகரின் சீரியபத்திறியாக்குவான கருதினல் ரப்பூனி, ஆர்மீனிய பத்திறியாக்குவான கருதினல் அகாஜியானியன் என்பவர்களும் அங்கிருந்தார்கள். பின்பு பாப்பரசின் விஞ்ஞானசாஸ்திர கழக அங்கத்தவர்களும், ரோமைநகர் மேயரும் அதிகமான அன்பளிப்புகளுடன் வந்தார்கள். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தஸ்தானத்தினிடமாக இருந்துவருகின்ற நாற்பதுக்கு மேற்பட்ட இராசியதூதுவர் கோஷ்டிகளின் தலைவர்கள் பாப்பரசரைப் பேட்டிகண்டார்கள்.

பாப்பரசரின் பிறந்தவிழாவை முன்னிட்டு அவருக்கு உலகின்சோபன வாழ்த்துகளைக் கொண்டனவாய்ப் பன்னீராயிரத்துக்குமேற்பட்ட தந்திகளும், ஆயிரத்துக்குமேற்பட்ட இருததல் நிறையுள்ள கடிதங்களும் வத்திக்கான் போய்ச் சேரலாயின. ஜனுதிபதி ஐஸன்ஹாவர் அவர்களிடமிருந்தும், டக்றர் அடெனுவர் (மேற்கு ஜேர்மனி) அவர்களிடமிருந்தும், மற்றும் இராச்சிய தலைவர்களிடமிருந்தும் வாழ்த்துச்செய்திகள் அவருக்குக் கிடைக்கலாயின.

"தங்கள் மகுடாபிஷேகத்தின் வருடாந்ததினமாகியஇன்று இந்திய அரசாங்கத்தினதும், இந்தியமக்களினதும் சார்பாக எங்கள் இருதயபூர்வமான வாழ்த்தையும், தாங்கள் நல்லசெளக்கியத்துடனும், சந்தோஷத்துடனும் இருக்கவேண்டுமென்ற கோரிக்கையையும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன்" என்று இந்தியஜனதிபதி டக்றர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச்செய்தியிலே தெரிவித்துக் கொண்டார்.

## மகுடாபிஷேக தினம்

தமது மகுடாபிஷேக பதினேழாம் ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு நிறைவேறவிருந்த பெரியபாடற்பூசைக்குத் தலைமைதாங்குமாறு பரிசுத்த பாப்பரசர் இம்மாதம் 11-ந்திகதி ஞாயிறன்றுகாலை கருதினல்மாரும், தமது இராசபரிவாரமும் புடைசூழ அர்ச். பேதுருவானவர் மகாலயத்திற்கு எழுந்தருளினர். அப்போது பரிசுத்தபிதாவின் குரற்தொனி உலகமுழுவதும் வானெலிமூலம் கேட்கலாயிற்று. அத்தருணம் அநேகநாடுகளைச்சேர்ந்த யாத்திரிகர்களும், அதிகாரபூர்வமான தூதுக் கோஷ்டியினர்களும் அங்குபிரசன்னமாய் இருந்தார்கள். அம்மகாலயம் மாத்திரமல்ல, அம்மகாலயத்தின் பரந்த மைதானம்முழுவதும், திபேர்நதிக்குச் செல்கின்ற பெரும்விசாலமான வீதியும் அவரை வாழ்த்தி ஆர்ப்பரிப்பதற்கும், மேல்மாடியிலிருந்து அவர்அருளப்போகும் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்குமாகக் காத்துநின்ற சனசமுத்திரத்தால் தேங்கியிருந்தன. செசியா கெஸ்தாத்தோறியாஎன்ற ஆசனத்தின் மீது எக்காளங்கள் இசைக்க அவர் மகாலயத்தில் பிரவேசிக்கும்போது அங்குசமுகமாயிருந்த மாபெரும்சனக்குழாம் வாழ்த்தொலிசெய்து மகிழ்ச்சி காட்டியது.

கருதினல்மார் திருச்சங்க தலைவரான கருதினல் திசருண் ஆண்டவர் பாப்பரசரின் பிரத்தியேக பீடத்திலே பெரியபாடற்பூசை நிறைவேற்றினர். அவ்வேளை மகாலயத்தில் இருபதுகருதினல்மாரும், இருநூறு மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாரும் சுமார் ஐம்பதினுயிரம் மக்களும் குழுமியிருந்தார்கள். ஆலயத்துக்கு வெளியிலும் சுமார் ஐம்பதினுயிரம் மக்கள் தேங்கியிருந்தார்கள். அப்போது பலிபீடத்திலிருந்து பரந்த அவரதுகுரற்தொனியை எல்லோருமே கேட்கக்கூடியவர்களாய் இருந்தாகள். திவ்விய பூசை முடிந்தபின் பரிசுத்தபிதா மகாலய மேல்மாடிக்கு வந்தபோது, அம்மகா

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லய மைதானத்திலிருந்து மேகமுழக்கம்போன்று வாழ்த்தொலிஎழுந்தது.

திவ்வியபூசையின்போது பாப்பரசரது பலிபீடத்தின்பக்கமாக உயர்மேடைகளிலே ஏறக்குறைய முப்பதுநாடுகளின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் அமர்ந்திருந்தார்கள். மற்றும் அநேகநாடுகளின் பிரதிநிதிகளாய் ஸ்தானிகர்களும், இராசியதூதுவர்களும், யாத்திரிகர்களும் சமுகமளித்திருந்தார்கள்.

## பச்செல்லி ஞாபகமுத்திரை

றியோ டி ஜனேய்றோ நகரைநோக்கி ஒருவர் ஆகாயவிமானத்தில் பறந்து செல்லும்போது, பிறேசில்நாட்டின் அழகியதலைப்பட்டணமாகிய அதனைச் சூழ்ந்திருக்கும் உயர்ந்தமலைகளுள் ஒன்றின்உச்சிமேல் ஓர்சிலுவையை அவர் தூரத்தேகாண்பார். ஆனல், அவர் கிட்டநெருங்கும்போது, அஃது உள்ளபடியே ஓர்சிலுவையல்ல, ஆனல், ஆசீர்வதிக்கும் பாவனையாகத் தமது கரங்கள்இரண்டையும் நீட்டியபடியுள்ள திருமீட்பராகிய கிறீஸ்துநாதரின் பிரமாண்டமான ஓர்திருச்சுரூபமென்றே பிரமிப்புடன் அவதானிப்பார்.

நியூயோக்நகரிலுள்ள சுதந்திரசிலையைக்காட்டிலும் மிகப்பாரியதாயுள்ள நமது திவ்வியகர்த்தரின் பிரமாண்டமான இத்திருச்சுரூபம் போல் லாண்டவுஸ்கி, சில்வா கொஸ்ராஎனும் பிரபல சிற்பிகள்இருவரினதும் கைவேலைப்பாடாகும். 1932-ம்ஆண்டு கருதினல் செபாஸ்ரியாலோ லெமெஆண்டவரால் பிரதிட்டைசெய்யப்பெற்ற இச்சுரூபம் 124 அடி உயரமுடையதாய், அரைமைல்உயரமான கொர்க்கோவாடோ எனும் மலையின்உச்சிமேல் நிறுவப்பெற்றுக் கீழேஅமைந்துள்ள அந்நகரை நோக்கியவண்ணமாய்க் காட்சியளிக்கின்றது.

இந்தப்போன திருச்சுரூபத்தின் பிரதிமையானது, 12-ம்பத்திநாதபாப்பரசர் கருதினல் பச்செல்லியென அறியப்பெற்றிருந்தபோது, அந்நகருக்கு அளித்ததரிசனையின் ஞாபகார்த்தமாக 1934-ம் ஆண்டு பாவனைக்குவிடுக்கப்பெற்ற ஓர்தபால்முத்திரையிலே பொறிக்கப்பட்டிருக்கிறது. அவர் அங்குவிஜயஞ்செய்யச் சிலதினங்களின்முன் ஆர்ஜென்ரினவின் தலைப்பட்டணமாகிய புவெனேஸ்அயேர்ஸ்நகரில் சர்வதேச சற்பிரசாதமகாநாட்டுக்குப் பாப்பானவரின் பிரதிநிதியாகச் சமுகமளித்திருந்தார்.

தற்போதைய பாப்பரசரானஅவர் பிறேசில்நாட்டைத் தரிசிக்கையில் கொர்க்கோவாடோமலையின் உச்சிக்குக்கொண்டுபோகப்பெற்று, றியோ டி ஜனேய்றோ நகரிலே ஏககாலத்தில் ஒன்றுகூடிய மாபெருஞ்சனத்திரள்களுள் ஒன்றின்முன்பாகத் திவ்வியபூசை நிறைவேற்றினர். இராக்காலத்திலே கிறீஸ்துநாதரின் இந்தச்சுரூபமானது தீபாலங்காரஞ்செய்யப்பெற்று, அந்நகருக்குமேலாக இருளடர்ந்த ஆகாயத்தில் நிறுத்திவைக்கப்பெற்றதொன்றாய்க் காணப்படுகிறது. உலகப்பிரயாணிகள் இரவிலோ அன்றேல் பகலிலோ இதனைக்கண்ணுற்றதும் உலகில் மகாஞானவருட்சிஉண்டுபண்ணும் திருச்சுரூபம் இதுவேயென்று அழுத்தமாகக் கூறுகின்றார்கள்.

## பாப்பரசர் சுபதினவிழா

அச்சுவேலியிலேபரிசுத்தபிதா 12-ம் பத்திநாதபாப்பரசரின் சுபதினம் சென்ற 11-3-56 ஞாயிறுவாரம் அதிசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆலயத்திலே அன்றுபிற்பகல் 4-30 மணிக்குத் திருமணித்தியாலஆராதனைநடந்து, சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டபின், சென் தெரேசாபாடசாலையிலே விழாஆரம்பமாயிற்று. இதற்கெனப் பாடசாலை அழகுறச் சிங்காரிக்கப்பட்டிருந்தது. பாப்பரசர்கொடிகள் காற்றிலேஅசைந்தாடி அனைவரையும் வரவேற்றன. உயர்மேடையின் ஓர்பகுதியிலே பாப்பரசரின் திருஉருவம் அமைந்த படம்ஒன்று வெண்பொன் நிறங்களால் மிகவும்அழகுபடுத்தப் பட்டிருந்தது. அவரது சின்னங்களான திறப்பு, வானவில், ஒலிவங்கிளை தாங்கிய புறாஎன்பன அதில்இடம் பெற்றுப் பாராட்டக்கூடியவிதமாகக் காட்சியளித்துநின்றன. மாலை 6 மணியளவில் வண. ஏ. மைக்கேல்சாமி சுவாமியவர்களும்,யாழ்ப்பாணமேற்றிராசனக்கோவிலின் உதவிக்குரவர் வண. பி. சூசைப்பிள்ளைச்சுவாமியவர்களும்சமுகந்தந்து விழாவைச்சிறப்பித்தனர். 6-15 மணிக்கு "ஆவேமறியா"என்னும் இசைத்தட்டின் கானத்தோடு விழாவைபவம் ஆரம்பமாயிற்று. அப்போது பாப்பரசரின் கொடிதாங்கிய மாணவர்கள்பலர் அவருக்குவந்தனப்பாக்கள் படித்தனர். ஓர்சிறுமி தகுந்தமுறையில் வாழ்த்துப்பத்திரம் படித்தாள். மற்றோர்சிறுமி நடனமூலம் அவர்படத்திற்குப் பூமாலை சூட்டினள். பின்னர் "சிலுவையின் மலர்கள்"என்னும் அழகியநாடகம் நடித்துக்காட்டப் பட்டது. வேதத்துக்காகப்போராடித் தங்கள்உயிரைத் தியாகஞ்செய்த சகோதரர்மூவரின் சரிதையை இந்நாடகம் தத்ரூபமாகக் காட்டியது. "திருச்சபைஸ்தாபனம்"என்னும் மற்றோர்நாடகம் அர்ச். இராயப்பர் அப்போஸ்தலராகத் தெரியப்பட்டுத் திருச்சபையின் தலைவராகியவிதத்தைக் காட்டியது. இன்னும் பலநடனங்களும், பாப்பரசரின் சீவியசரிதை பற்றிய சொற்பொழிவும் நடைபெற்றன. ஈற்றில் வண. ஏ. மைக்கேல்சாமி சுவாமியவர்கள் பாப்பரசரைப்பற்றியும், நாடகங்களைப்பற்றியும் சிலபேசினர். "சிலுவையின்மலர்கள்"எனும் நாடகத்தின்படிப்பனையை எடுத்துக்காட்டி, நாமும் வேதத்துக்காகத் தைரியமாய் உயிரைத் தியாகஞ்செய்யத் தானுங் கூடியவர்களாய் இருக்கவேண்டுமெனப் புத்திகற்பித்தார். ஈற்றில் "ஒருவெண்கொற்றக் குடைநிழலில்" என்றகீதத்துடன் விழமுடிவாயிற்று. —நிருபர்

## திரிகோணமலைத் தபால்

திரிகோணமலையிலுள்ள கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலைகளிற்படிக்கும் 5-ம்வகுப்புக்குமேற்பட்ட ஆண்பிள்ளைகளின் வருடாந்த ஞானஒடுக்கம் சென்ற 16-3-56 வெள்ளிக்கிழமைபிற்பகல் 6-30 மணியளவிலே ஆசனக்கோயிலில் ஆரம்பமானது. இதற்குத் திரு. ஐ. பற்றிக், திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை, திரு. ரி. அருளப்புஆசிரியர்களும், அர்ச். சூசையப்பர் தமிழ்ப்பாடசாலையிலிருந்தும், சின்னக்கடையிலிருக்கும் அர்ச். பிரான்சீஸ்சவேரியார் பாடசாலையிலிருந்தும் 60 பிள்ளைகளும் சமுகமளித்தார்கள். வண. ஹென்றி பொன்னையா சுவாமியவர்கள் போதகராயிருந்து, அருமையானபிரசங்கங்கள் நிகழ்த்தினர். ஞானஒடுக்கம் 20-ந்திகதிசெவ்வாய்க்கிழமைகாலை திவ்வியபூசைப்பலியுடன் முடிவுற்றதும் பிள்ளைகள் அன்பளிப்பாக ஓர்ஞானப்பூச்செண்டைப் போதகரான சுவாமியாருக்கு அளித்தார்கள். முடிவில்சுவாமியாருடைய ஆசீர்வாதத்தைப்பெற்றுத் தங்கள்வீடேகினர். — நிருபர்

### புத்தக மதிப்புரை

## கம்பராமாயணம் உயுத்தகாண்டம் கும்பகருணன் வதைப்படலம் (1-171 செய்யுள்கள்)

உரையாசிரியர்கள் :
பண்டித இ. நமசிவாய தேசிகர்
பண்டித வ. நடராஜன்

பதிப்பு :
சுன்னுகம், வட - இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம்.

விலை : ரூபா 2.

G. C. E. வகுப்புக்கு 1957-ம்ஆண்டு தொடக்கம் 1960-ம்ஆண்டுவரை கும்பகருணன் வதைப்படலம் இலக்கியப் பாடப்புத்தமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்படலம் கம்பராமாயணத்தில் ஓர்முக்கியஇடம். இதன்கண்விளங்கும் போதனைகள் அனந்தம். மானத்தையே வீரமாகக்கொண்டுவிளங்கிய கும்பகருணனைப்பற்றிக் கூறும்பாக்கள் உணர்ச்சிமிகுந்தவை. உருக்கம்நிறைந்த உன்னத மொழிகளால் ஆக்கப்பாடு செய்யப்பட்டவை. ஆயினும், சிறுவர்கள் இலகுவில் விளங்கமுடியாதவை. விளக்கத்திற்கு உரை அத்தியாவசியகம்.

இம்முயற்சியில் உரையாசிரியர்கள் பண்டித நமசிவாய தேசிகர் அவர்களும்,பண்டிதநடராஜன் அவர்களும் ஈடுபட்டமை போற்றத்தக்கது. இந்நூலில் மாணவர்கள் பாட்டைப்பிரித்து விளங்கக் கூடியவிதமாக உரை அமைந்துள்ளது. இதில்எடுத்தாளப்பட்ட கொண்டுகூட்டுமுறை மாணவர்களுக்குப் பாட்டை இலகுவில் வாசிப்பதற்கும், சொல்லுச்சொல்லாகக் கருத்தை அறிவதற்கும் உறுதுணையாயிருக்கும் என்பது தெளிவு. இவ்வுரை பலஆசிரியர்களின் உதவிகொண்டு ஆக்கப்பட்டமையால் இந்நூல்மற்றையஉரைகளிலும்சிறந்து முதல்ஸ்தானத்தை வகிக்கும்என்பது பிரத்தியட்சம். இவ்வுரைநூல் மாணுக்கர்க்குப் பரீட்சைக்கு மட்டும் படிக்கவேண்டுமென்ற உணர்ச்சியை ஊட்டாது. ஏனெனில், அறிவிற்காகக் கம்பராமாயணத்தைக் கற்கவேண்டுமென்னும் ஆசையைத் தானகவே உண்டுபண்ணக்கூடியவிதமாய்இது எழுதப்பட்டுள்ளது. செய்யுள்நயங்கள், தொகுப்புக்குறிப்புகள், கதாபாத்திரத்தின் இயல்புகள், மாதிரிகைவினக்கள் ஆதியன அமைந்து இந்தநூலை மேன்மேலும்துலங்கச்செய்கின்றன. எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகிறோம்.

---

பரீஸ்நகர சுற்றுடலிலுள்ள தளபாடங்கள் அசையாமல் அப்படியேயிருக்க 32அடிக்கப்பால் நகர்த்திவைக்கப்பட்டிருப்பதாய்ச் சென்ற 9-ந்திகதியன்று அங்கிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. ஓர்புதியபாதைக்கு இடம்விட்டுக் கொடுப்பதற்காகவே இந்தவீடு அத்திவாரத்திலிருந்து துண்டிக்கப்பட்டு, றெயிற்பாதையில் ஓடக்கூடிய சில்லுகளின்உதவியோடு நகர்த்தப்பட்டுப் புதியஅத்திவாரத்தில்கொண்டுபோய்ப் பொருத்தப்படலாயிற்று.

---

## கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த ஞானஒடுக்கம் — 1956 —

வழமைப்பிரகாரம் கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த ஞானஒடுக்கம் இளவாலை, திருக்குடும்பக் கன்னியர்மடத்தில் சித்திரைமாதம் 17-ந்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி 21-ந்திகதி சனிக்கிழமை காலை திவ்வியபூசையுடன்முடிவாகும்.

நமதுமுகாமையின்கீழ்த் தொண்டாற்றும் சகலகத்தோலிக்க ஆசிரியைகளும், ஆங்கிலங்கற்பிக்கும் ஆசிரியைகள்உட்பட, இதிற்பங்குபற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆசிரியைகள்அல்லாத பெண்களுக்கும் இந்தஞானஒடுக்கத்தில் பங்குபற்ற உத்தரவு உண்டு.

ஞானஒடுக்கத்திற் பங்குபற்ற விரும்புவோர் இளவாலை, திருக்குடும்பக் கன்னியர்மடத்துச் சங். சிரேஷ்டதாயார் அவர்களுக்கு நேரத்துடன் அறிவித்தல் அனுப்பவேண்டும்.

சென்றவருடங்களிலும்பார்க்க, இவ்வருடம் அதிகமானபேர்கள் பங்குபற்றுவார்கள்என எதிர்பார்க்கிறோம்.

S. Emmanuel, O.M.I.,
The Actg. Gen. Manager,
R. C. Schools.

Jaffna, 19-3-56

---

## ஆசிரியர் தேவை

இலுப்பைக்கடவைப் பதிவுசெய்யப்படாத கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலைக்கு 23-4-56 தொடக்கம் பயிற்றப்பட்ட, அல்லது பயிற்றப்படாத தராதரப்பத்திரமுடைய ஒரு ஆசிரியர் தேவை. தராதரப்பத்திரமுடையவர்களாயிருந்து இளைப்பாற்று வேதனம் பெறும் ஆசிரியரும் விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம். **ஆங்கில, அல்லது தமிழ் S. S. C. பத்திரம்உள்ளவர்கள் விண்ணப்பஞ் செய்ய வேண்டியதில்லை.**

Gen. Manager,
R. C. Schools.

Jaffna, 14-5-56.

---

வெளிவந்துவிட்டது!

**கிறிஸ்தவ போதகச் சுருக்கமாகிய**

**பெரிய குறிப்பிடம்**

யாழ்ப்பாண மேற்றிராசனத்திற்குட்பட்ட சகல கோவில்களிலும், பள்ளிக்கூடங்களிலும் (மேல்வகுப்பு மாணவர்க்கு) உபயோகிக்கப்படவேண்டுமென்று நம்மேற்றிராணியாண்டவரால் அங்கீகரிக்கப்பட்ட இச்சமயபாடபுத்தகம் விசுவாசப்பிரமாணம், கிறிஸ்தவ ஒழுக்கம், கிறிஸ்தவ வழிபாடு என மூன்றுகாண்டங்களாக வகுக்கப்பட்டு நவீனமுறையில் அழகிய பதிப்பில் வெளிவந்துள்ளது.

பிரதிவிலை நபா **1-75.**

தபாற்செலவு பிரத்தியேகம்

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுச் சுடர்

✳ தற்போதைய 12-ம் பத்திநாத பாப்பரசரால் எத்தனை சுத்தவாளர், சுத்தவாளிகள் அர்ச்சியசிட்டபட்டஞ் சூட்டப்பெற் றிருக்கிறூர்கள்?

அவர் 1939-ம் ஆண்டு பங்குனி மாதம் 12-ந் திகதி பாப்பானவரானது முதல் 33சுத்தவாளர், சுத்தவாளிகள் அவரால் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பெற்றிருக்கிறூர்கள்.

✳ 12-ம் பத்திநாத பாப்பரசர் எத்தனை சாதாரணநிருபங்கள் விடுத்திருக்கின்றூர்?

28 சாதாரண நிருபங்கள் விடுத்திருக்கின்றூர். இவற்றிலே கடைசியானது, திருச்சங்கீதத்தைப் பற்றி 1955-ம்ஆண்டின் கிறிஸ்மஸ்பண்டிகையன்று விடுக்கப்பட்டதாகும். இவருக்குமுந்திய 11-ம் பத்திநாத பாப்பானவர் 30 சாதாரணநிருபங்கள் விடுத்திருந்தார். ஆனூல், மிகப்பெருந் தொகையாகப் 13-ம் சிங்கராய பாப்பானவரே 86 சாதாரணநிருபங்கள் விடுத்திருந்தார்.

✳ கோவிலிலே ஒருவர் தனிமையாகச் சிலுவைப்பாதை சுற்றும்போது அந்தந்தஸ்தலத்துக்குச் செல்லவேண்டுந்தாஞ?

ஆம், எப்போதும் செல்லவேண்டும்.

✳ பறவைகளிளெல்லாம் மிகப் பெரியபறவைகள் எவை?

தீக்கோழிகளே. இவைகள் எட்டு அடி உயரமுள்ளன. சிறந்தஇனமான தீக்கோழிகள் தென்னூபிரிக்காவிலுள்ளன. பேட்டுத்தீக்கோழியின் மிகவுந் தடித்த ஓடுள்ள முட்டைகளில்லொன்றைக்கொண்டு 15 பேரைப்போஷிக்கலாம்.

✳ பாப்புமாருள்ளே பாப்பரசராக ஆட்சிபுரிந்து வெள்ளியூபிலியைக் கண்ட ஒரேயொருபாப்பானவர் யார்?

அர்ச். பேதுருவானவரே. இவர் 25 வருடகாலம் திருச்சபையை ஆட்சி செய்தார்.

✳ பாப்புமாருளெல்லாம் அதி விருத்தாப்பிய பாப்பானவர் யார்?

அர்ச். அகாதோ பாப்பானவரே. இவர் கி. பி. 681-ம் ஆண்டு தமது 106-ம் வயதில் காலஞ்சென்றூர். ஆனூல், இவர் 103-ம் வயதில் பாப்பானவராகத் தெரியப்பெற்று மூன்று வருடமே ஆட்சிசெய்தார்.

✳ எந்த வல்லரசினிடம் கூடிய தொகையான அணுக்குண்டுகள் இருக்கின்றன?

அமெரிக்க அரசினிடமே கூடிய தொகையான — அதாவது, ருஷியாவிடம் இருப்பதைக் காட்டிலும் மும்மடங்குதொகையான அணுக்குண்டுகள்இருப்பதாக "மான்செஸ்றர் காடியன்" எனும்பத்திரிகை கூறுகின்றது. ருஷியாவிடம் 10,000 அணுக்குண்டுகளும், அமெரிக்கஅரசினிடம் 32,500 அணுக்குண்டுகளும் இருக்கின்றனவாம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கடவுளின் விசேஷகிருபையினூலும், சதாசகாயமாதாவின் அனுக்கிரகத்தினூலும் எனக்குப்13வருஷகாலமாக இருந்துவந்த வருத்தம் தற்போது பூரணமாகக் குணமடைந்ததையிட்டு நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

வங்காலை அ. சிறில் தவரேரா

## எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I)... | 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கிளேஸ் பேப்பர் ... | 5-00 |
| பைபிள் ,, ... | 5-75 |
| ,, அடையாளமுள்ளது ... | 6-00 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) ... | 5-00 |
| ,, (தோல்) ... | 7-50 |
| முத்தித்திறவுகோல் (கலிக்கோ) ... | 2-50 |
| ,, (தோல்) ... | 3-50 |
| செபச்செண்டு ... | 75 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் ... | 2-00 |
| திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் ... | 40 |
| நித்திய ஆராதனை ... | 25 |
| இரா ஆராதனை ... | 25 |
| திருமணித்தியாலம் ... | 40 |
| திவ்வியபூசை மகத்துவம் ... | 2-50 |
| பூசை உதவி மந்திரம் ... | 40 |
| பூசை உதவி மந்திரம் (மட்டை) ... | 15 |
| வேதாகம வாசிப்பு ... | 90 |
| சற்பிரசாத அன்பன் ... | 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை ... | 2-90 |
| பசாம் ... ... | 1-50 |
| சிலுவைப் பாதை ... | 30 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் ... | 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 5-00 |
| கத்தோலிக்கு கீர்த்தனைமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 75 |
| தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 75 |
| இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) ... | 1-50 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) ... | 4-75 |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி ... | 75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| ,, (Part II) ... | 90 |
| ,, (Part III) | 90 |
| திருஇருதய வணக்கமாதம் ... | 1-50 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) ... | 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-50 |
| நவதின உற்சவம் ... | 75 |
| தரும அப்பம் ... | 1-00 |
| பத்திச் சபைகள் ... | 20 |
| ஆத்தும தரிசனம் ... | 20 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |

அதிபர்,
சஞ்சுசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## நன்றியறிந்த தோத்திரம்

என்னையும், என்குடும்பத்தையும் கொடிய வைசூரியிலிருந்து குணப்படுத்தி, மேலும் நான் வேண்டிக்கொண்ட காரியங்களைச் சித்தியடையச்செய்ததற்காக அர்ச். சதாசகாயமாதாவுக்கு நன்றியறிந்த தோத்திரம். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

மா[illegible]



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

கச்சைதீவு அர்ச். அந்தோனியார் கோவிலுக்கு இற்றைக்கு இருபது வருடங்களின்முன் எனது மனைவி யாத்திரைசெய்தபோது, தான் அணிந்திருந்த சறட்டின் பதக்கத்தை அங்குதானே இழந்துபோயினூ. இது 125 ரூபா பெறுமதியுடையது. இழந்துபோகப்பெற்று இருபதுவருடங்களின்பின் இம்முறை நானும், அவவும் ஒருங்கே அப்பதிக்கு யாத்திரைசெய்து அங்கு போய்ச்சேர்ந்த மறுதினமே அங்கு கடற்கரைமணலில் அப்பதக்கம் எங்கள் உறவினரால் கண்டெடுக்கப்பெற்று, ஆனந்தங்கொண்டவர்களாக அர்ச். அந்தோனியாருக்கு எங்கள் நன்றிக்கடனைச் செலுத்தலானேம். அவர் நாமம் எங்கும் புகழப்படுவதாக.

நெடுந்தீவு நடுக்குறிச்சி,
நெடுந்தீவு. சிமியோன் சின்னத்துரை

* * *

எனதுபாரியாரினதும், மகளினதும் சுகயீனத்தினூல் மனமுடைந்த யான் பரிசுத்த சதாசகாயமாதாவைச் சரணடைந்து அவவின் உதவியை இரந்துகொண்டேன். அவவின அனுக்கிரகத்தினூல் பூரணசுகம் கிடைத்தது. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். பரிசுத்த சதாசகாய நாயகி எங்கும் புகழப்படுவாவாக.

தாழ்வுபாடு ஓர் பக்தன்

* * *

என்னைப்பீடித்திருந்த அபாயகரமான நோயிலிருந்து என்னைக்காப்பாற்றி வைத்ததற்காகப் பரிசுத்த சதாசகாயமாதாவுக்கும், அர்ச். சூசையப்பருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்து, நேர்த்திப் பிரகாரம் இதனைப்பிரசுரஞ் செய்கின்றேன். அவர்களின் நாமம் புகழப்படுவதாக!

புலோலி எஸ். பிரான்சீஸ்

* * *

விவாகமாகிப் பதின்மூன்றுவருஷகாலமாக மகப்பேறின்றி, அநேக வைத்திய சிகிச்சைகளினூலும் திருப்தியடையாது கவலைகொண்டநாங்கள் சதாசகாயமாதாவின் வேண்டுதலினூல் தற்போது ஓர் ஆண்குழந்தை கிடைக்கப்பெற்ருேம். எங்கள் நேர்த்தியின்படி சதாசகாயமாதாவின் மகத்துவத்தை இப்பத்திரிகைமூலம் பகிரங்கப்படுத்துகிருேம்.

மன்னூர் T. C. மிராண்டா தம்பதிகள்

* * *

எனக்குச் சுவாதநோய்வந்து வியாதி குணமாகிவரும்பொழுது திடீரெனச் செங்கமாரிவியாதி துவங்கினது. அப்பொழுது என்னைக் கொழும்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் மருந்துசெய்வித்தார்கள். அச்சமயம் என்னுடைய ஈரலில் ஏதோ வியாதிஇருப்பதாக டக்றர் கூறினூர். உடனே நான் அர்ச். சதாசகாயமாதாவின் நோவனைப்புத்தகத்தை என்து வயிற்றின்மேல்வைத்து டக்றர்மார் சோதிக்கும்பொழுது யாதொருவித்தியாசமுமில்லாமல் மாற்றிவிடும்படி அவவை மன்ருடினேன். பின்னர் டக்றர் மூன்றுமுறை படம் (எக்ஸ்றே) பிடித்தும் ஒருவிதமான வித்தியாசமும் காணமல் ஆச்சரியப்பட்டார். அர்ச். சதாசகாயமாதா இந்தப் புதுமையைச் செய்ததிக்காக எங்கள் தாழ்மையான நன்றியைச் செலுத்துகின்ருேம்.

தலவாக்கொல்லை அ. பி. சி.

## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல்
தருமசபை
யாழ்ப்பாணம்



### கேட்டநன்மைகள் அனுகூலமானதினூல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

மலாயா: ஜே. சவிரிமுத்து 10-00 — முள்ளிக்குளம்: கே. வி. கூஞ்ஞு 7-00, சந்தியா சில்வா 5-00 — கேகாலை: ஏ. யுவக்கிம் 5-00 — கருக்குப்பனை: எஸ். தேவசகாயம் 5-30 — அக்கரபற்றனை: எல். ஏ. எஸ். தோமஸ் 3-00 — டன்கொற்றுவா: டபிள்யு. ஏ. பெனடிற் 2-00 — நாவற்காடு: எஸ். தோமஸ் 5-00 — றத்தோட்டை: செசிலியா ஜோண் 10-00 —நெடுந்தீவு: எஸ். யோசேப்பு 50-00 — கட்டைக்காடு: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 4-00 — கல்கமுவா: பி. நீக்கிலாஸ் 2-00 — எட்டியாந்தோட்டை: ஆர். எஸ். பிரான்சீஸ் 2-00 — கொச்சிக்கடை: பி. எஸ். கயித்தான் 10-00 — முருங்கன்: எஸ். லூக்கேஸ்பிள்ளை 3-00 — தலவாக்கொல்லை: வி. எஸ். அந்தோனிப்பிள்ளை 5-90 — இற்ருலை: மிசெஸ் பிருங் அன்ரன் 4-00, பிருங எல். லீயோ 5-00, பிருங் அன்ரன் 7-00 — மாம்புரி: எஸ். அந்தோனிப்பிள்ளை 2-00 — அடம்பன்: அந்தோனி முத்து ரேசலின் 5-00 — உடப்புசலாவை: ஏ. எஸ். பீற்றர் 3-00 — பரந்தன்: கே. அந்திரேஸ் 3-00 — பண்டாரவளை: எஸ். எம். யோசேப்பு 2-00—பருத்தித்துறை: ஆர். தோமஸ் 5-00 — லிண்டுலா: எம். பி. போல் 3-00 — திரிகோணமலை: தோமஸ் மோசேஸ் 2-00—கருக்குப்பனை: எஸ். அகஸ்ரீன் 3-00 — பூக்குளம்: எஸ். பி. பறுணூந்து 2-00 — வட்டவளை: ரி. அன்ரனி குரூஸ் 6-00 — செட்டிகுளம்: வி. சவிரிமுத்து 10-00, ஜே. இராயப்பு 5-00—மஸ்கேலியா: எம். டி. பி. ஜோண் 2-00, உத்தரியம் செபஸ்தியம்மாள் 2-00 — கொஸ்லான்ட்: எஸ். கே. எம். பிள்ளை 10-00 — சூராவத்தை: எம். ஆர். கத்தரீனம்மா 3-88, எஸ். ஆசீர்வாதம் 5-00 — கரவெட்டி: பி. கபிரிகேற்பிள்ளை 1-50, எஸ். பஸ்ரியாம்பிள்ளை 1-00 — யாழ்ப்பாணம்: ஓர் உபகாரி 2-00, எம். சின்னப்பு 1-00, ஏ. பிரான்சீஸ்பிள்ளை 6-00 — கொழும்பு: கே. அந்திரேஸ் 3-00, மிஸ். ஏ. அந்தோனிப்பிள்ளை 15-00, எஸ். வி. பீற்றர் 2-00 — கொள்ளுப்பிட்டி: எஸ். சந்தியாப்பிள்ளை 10-00 — கொச்சிக்கடை: ஆர். ஜே. செல்லையா 50-00, எம். ஜே. பெர்னூண்டோ 2-00—பாஷையூர்: மிசெஸ் ரி. அருமைநாயகம் 2-00, மிசெஸ் ஞானப்பிரகாசம் 3-00 — ஊர்காவற்றுறை: ஏ. பிலிப்பையா 5-00 — மன்னூர்: எஸ். ஏ. ரேஸ் 5-00 — நீர்கொழும்பு: ஓ. எக்ஸ். பெர்னூண்டோ 5-00—கற்பிட்டி: எஸ். பி. நேனீஸ் 3-50 —புத்தளம்: வி. சலமன் 3-00—அப்புத்தளை: எஸ். எம். யோசேப் 10-00 — சிங்கப்பூர்: ஏ. எம். யோசேப் 5-00, ஜோண் மேரி 54-00, மிசெஸ் நாதன் 30-00, எம். ஏ. பெஞ்சமின் 30-00, எஸ். அன்ரனி 2-00, ஓர்உபகாரி 40-00—அப்புத்தளை: ஆர். ஆரோக்கியம் 2-00—பாஷையூர்: தவிது பறுணூந்து 2-00.

The Director.
St. Joseph's
Conference.
Bishop's House
JAFFNA.

சென் வின்சென்ற் டி போல்சபைத்தலைவர்
மேற்றிராசன மாளிகை,
யாழ்ப்பாணம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 22-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org